பக்கங்கள்:11 விலை : 30/-

காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 30 செவ்வாய்க்கிழமை 10.05.2022 கதிர் 186

இனி இது ரகசியம் அல்ல!

நான் இன்று அதிகம் நீட்டோலை படிக்கப்போவதில்லை. விதி வலியது. அறம் கொடியது. அது நின்று கொல்லும். இன்று அது உறுதியாகியுள்ளது.

அழிவுகளில் மகிழ்பவன் அல்லன் நான். அப்படி ஒரு காலம் இருந்தது. 2

# கோபாவேச வெறியாட்டம்!

## ராஜபக்ஷளுக்கு எதிராகத் தெற்கு மக்கள் இரவிரவாகத் தேடித் தேடித் தாக்குதல்கள்







ராஜபக்ஷக்களின் நிர்வாகம் மீது பெருஞ்சீற்றத்தில் இருக்கும் தென்னிலங்கை மக்கள் நேற்று காலி முகத்திடலில் பகல் நடைபெற்ற வன்முறைச் சம்பவத்தை அடுத்து, வெறி கொண்டவர்கள் போல ராஜபக்ஷக்களின் பிரதான ஆதரவாளர்களைத் தேடித்தேடி தாக்குதல் நடத்தும் நடவடிக்கைகளை மிக மோசமாக மேற்கொண்டு வருகின்றனர் எனப் பல இடங்களில் இருந்தும் செய்திகள் கிடைத்து வருகின்றன. 03

## அமெரிக்கா கண்டனம்

நாட்டில் நேற்று நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களுக்கு அமெரிக்கா தனது கண்டனங்களைத் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் ருவிட்டரில் கருத்துத் தெரிவித்துள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் - இன்று(நேற்று) நடைபெற்ற அமைதியான போராட்டக்காரர்களுக்கு எதிரான வன்முறையை நாங்கள் கண்டிக்கின்றோம். மேலும் வன்முறையைத் தூண்டியவர்களைக் கைது செய்து, வழக்குத் தொடர்ந்து, முழுமையான விசாரணையை நடத்துமாறு இலங்கை அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கின்றோம். இன்று 03

## நாளை காலை வரையில் ஊரடங்கு நீடிக்கப்பட்டது


நாட்டில் நேற்றையதினம் இடம்பெற்ற வன்முறைகளைத் தொடர்ந்து நாடளாவிய ரீதியில் நேற்று இரவு 7 மணி முதல் இன்று காலை 7 மணி வரை அமுல்படுத்தப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் நாளை புதன்கிழமை காலை 7 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் வழங்கப்பட்ட எழுத்துபூர்வ அனுமதி தவிர அந்தப் 03

## மஹிந்தவைக் கைது செய்யுமாறு மைத்திரி, சுமந்திரன் கோரிக்கை

ஜனாதிபதியும் பிரதமர் உட்பட அரசாங்கமும் உடனடியாகப் பதவி விலக வேண்டும் எனக் கோரி தன்னெழுச்சியாக காலி முகத்திடலிலும் அலரி மாளிகையின் முன்னும் அமைதியான முறையில் போராட்டங்களை முன்னெடுத்து வந்தவர்கள் மீது நேற்றுத் தாக்குதல் நடத்தியவர்கள் மற்றும் ஏற்பாடு செய்து இவர்களைக் கொழும்புக்கு அழைத்து வந்தவர்கள் ஆகியோருடன் நேற்றைய தினம் பிரதமர் பதவியை இராஜினாமாச் செய்த மஹிந்த ராஜபக்ஷவையும் கைது செய்து சட்டத்தின் முன்பு நிறுத்த வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் 03

## வீரகெட்டியவில் துப்பாக்கிச் சூடு இருவர் சாவு; எட்டுப் பேர் காயம்!



வீரகெட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் 8 பேர் காயமடைந்து வீரகெட்டிய 03

## மஹிந்தரின் ராஜினாமா ஏற்பு உடன் வர்த்தமானி அறிவிப்பு

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஏற்றுக் கொண்டுள்ளார்.

பிரதமர் பதவியில் இருந்து மகிந்த ராஜபக்ஷ இராஜினாமாச் செய்துள்ளமை தொடர்பான வர்த்தமானி நேற்று இரவு வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசமைப்பின் 47(2)(அ) ஆம் உறுப்புரையின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசமைப்பின் பிரதமர் பதவியில் இருந்து 2022 மே மாதம் 9 ஆம் திகதியிலிருந்து கேட்டுவிலகியுள்ளார் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது என 03

## ஆர்ப்பாட்டக்காரர்களினால் சூழப்பட்ட அரச தரப்பு எம்.பி. சுட்டுத் தற்கொலை

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொலன்னறுவை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துக்கோரள அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களுடனான மோதலின் போது உயிரிழந்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துக்கோரளவுக்குச் சொந்தமானதாகக் கூறப்படும் வாகனம் ஒன்று நேற்று மாலை நித்தம்புவ பிரதேசத்தில் துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஈடுபட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினரின் வாகனத்தில் வந்த குழுவொன்று அப்பகுதியில் கூடியிருந்த அரசாங்க 03



துப்பாக்கியுடன் ஓடும் அமரகீர்த்தி

## அலரி மாளிகையின் வாயிலில் நேற்று கண்ணீர்ப் புகைக் குண்டு, வேட்டுகள்

கொழும்பில் நேற்று நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களையடுத்து மக்கள் அலரி மாளிகையை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தியிருந்தனர்.

இதன்போது அலரி மாளிகையின் வாயிற்கதவை உடைத்துக்கொண்டு ஆர்ப்பாட்டக் காரர்கள் வலுக்கட்டாயமாக உள்ளே செல்ல முற்பட்டபோது பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளைப் பிரயோகித்து அவர்களைக் கலைத்தனர்.

எனினும் அதற்கும் கட்டுக்கடங்காத 2



## குமார வெல்கம எம்.பி. தாக்கப்பட்டுக் காயம்!

நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம பயணித்த வாகனம் மீது இனந்தெரியாத சிலர் தாக்குதல் நடத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தில் காயமடைந்த நாடாளுமன்ற உறுப்பினர் சிறு காயங்களுடன் ஹோமாகம வைத்தியசாலையில் 03



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
முகாம்கள் தகர்த்தழிக்கப்பட்டபோதும், கப்பல்கள் சிதைக்கப்பட்ட போதும், வான ஆர்த்திகள், டாங்குகள் அழிக்கப்பட்ட போதும்எங்கள்பேனாக்கள்போர்ப்பரணி பாடிய காலம் ஒன்று இருந்தது. அது மலையேறி விட்டது. அப்போது நாங்கள் ஆற்றிய பணி அறத்தின்பால் பட்டதா என்ற சந்தேகம் இன்னும் மனதை அரித் துக் கொண்டிருக்கின்றது.

ஆனால், அறம் வலியது. தாமதித்தா லும் நீதியின் பால் செல்வது என்று நம் பும் ஒரு நிலைமை இப்போது. யாரினதும் அழிவிலோ அல்லது பின்னடைவிலோ அற்ப சந்தோஷம் தேடும் அகமகிழ்வாக இதைக் கருதிவிடாதீர்கள். என் வாசக ரோடு என் மனதில் பட்டதை நான் பகிர முடியும் என்ற உரித்தில் எழுதுகிறேன்.

மூன்று தசாப்தகால விடுதலைப் போரில் என் உற்ற நண்பர்கள் பலரைக் காவு கொடுத்திருக்கிறேன். அவர்களில் சிலர் மீண்டு வரோம் என்று விடுதலை உறுதியுடன் விடை பெற்றவர்கள். அவர் களின் பெருமை, ஈகம், தியாகம், வீரம், உறுதிஆகியவற்றைஇப்போது பேசுவதில் அர்த்தமில்லை. எங்கள் மனவறையில் அவர்களுக்கு மூலஸ்தான இடமளித்து மனதாரப் பூஜிப்போம். அதுதான் முடி யும். அதைத்தான் என்னைப் போல தமிழ் ஆர்வலர்கள் செய்கின்றனர்; செய்ய முடியும்.

இந்தத் தியாகிகள் குறித்து என் மன தில் செல்லரிக்கும் கேள்வி ஒன்று உண்டு. இப்படி மீளாத் துயில் கொண்ட சுமார் இருபதாயிரத்துக்கும் அதிகமான போராளிகளின் வித்துடல்கள் புதைக் கப்பட்ட கல்லறைகளை, கௌதம புத்த னின் பஞ்ச சீலத்தைப் பின்பற்றுவதாகக் கூறும் பௌத்த, சிங்களப் பேரினவாதம் புல்டோஸர்கள் கொண்டு உழுது, சிதைத் தழித்து, மனித மாண்புகளுக்கே மாறான கொடூரத்தைப் புரிந்தது. அந்த மறவர் களின் ஆன்மாவைத்தன்னும் நித்திய நித்திரையில் ஜீவிக்க ராஜபக்ஷ கொடூரம் அனுமதிக்கவில்லை.

அந்த மாவீரர்கள் துயிலும் இல்லங் களைத் தேடித் தேடி சிதைத்தழித்து, தாங் கள் மனித குலத்தைச் சார்ந்தவர்கள் அல்லர் என்ற உண்மையை உரைத்த சிங்களம், அந்தத் துயிலும் இல்லங்க ளில் முகாம்கள் அமைத்துக் கொண்டா டியது.

யுத்தம் முடிந்த பின்னர் இராணுவத் தளபதிகள் பங்குபற்றும் பத்திரிகையாளர் மாநாட்டில் 'இந்த பௌத்த சீலம்' குறித்து நான் கேள்வி எழுப்புவதும், கல்லறைகள் என்ற பெயரில் அவற்றினுள் விடுதலைப் புலிகள் ஆயுதங்களைப் புதைத்து வைத் திருக்கலாம் என்ற சந்தேகத்தில் அவற் றைத் தகர்த்துத் தேடினோம் என்று இரா ணுவத் தரப்பில் பதில் தருவதும் வழமை யாக இருந்து.

அந்தக் காலம் மலையேறி விட்டது. இந்தத் துயரச் சீற்றம் என் மனதில் அவ் வப்போது குடைவதுடன் அடங்கி விடும். அவ்வளவுதான் எங்கள் இயலுமை. இந்தக் கொடூரத்தின் ஆழத்தைக் குறைந்த பட்சம் ராஜபக்ஷக்களின் அடுத்த தலை முறையாவது புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக நாமல் ராஜபக்ஷவுடன் பேசும் போது சில சமயங்களில் அது குறித்துப் பிரஸ்தாபிக்க முயல்வேன். அவர் அதைத் தட்டி விட்டு வேறு விடயத் துக்குக் கதையை மாற்றுகின்றமையை அவதானித்திருக்கிறேன்.

என்றோ ஒரு நாள் அரசியலில் இருந்து மஹிந்த ஓய்வுபெற்ற பின்ன ராவது, என் நெஞ்சில் ஆழமாகத் தைத்தி ருக்கும் அந்த ரணவலியை அவரிடம் கூறி, அவரின் பிரதிபலிப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று நினைப்ப துண்டு.

விதிவலியது, தானே அந்த உணர்வை - ரணத்தை - ராஜபக்ஷக்களுக்கு அதுவே கொடுத்து விட்டது. அதற்காக நான் மகிழ்வில்லை. ஆனால் அறத்தின் மாண்பைப் பார்த்து வியந்து நிற்கிறேன்.

உயிரிழந்த தங்கள் பெற்றோர்களுக் காக - தந்தை டி.ஏ.ராஜபக்ஷவுக்காக, வீரகெட்டிய, மெதமுலனவில் அமைத்த நினைவுத் தூபியை அரசியல் வன்முறை யாளர்கள் நேற்றிரவு தீயிட்டுக் கொளுத்தி நாசமாக்கியிருக்கின்றார்கள்.

இந்த நினைவிடத்தைக் கூட அர சாங்கத்தின் பணம் மூலம், பாதுகாப்பு அமைச்சு ஊடாக நிதியைச் செலவிட்டு ஊழல் புரிந்தார் என்ற குற்றச்சாட்டு ஜனா திபதி கோட்டாபய ராஜபக்ஷ மீது உண்டு. அவர் ஜனாதிபதியாகிவிட்டமையால் எல்லா வழக்குகளும் காணாமல் போய் விட்டன.

ஆனால், மீளாத் துயில் கொள்ளும் உறவுகளின், நண்பர்களின் உறைவிடம் இப்படி வன்முறைக்குள்ளாக்கப்படுவது, அது எத்தகைய வேதனையைத் தரும் என்பதை இந்தச் சம்பவம் ராஜபக்ஷக் களுக்கு நிச்சயம் உணர வைக்கும்.

ஆனாலும் இப்போதும் கூட, அந்த 20 ஆயிரம் போராளிகள் - வீரமறவர் கள் - மீளாத்துயில் கொள்ளும் - வித்துடல்கள் விதைக்கப்பட்ட இடங்களை இப்படித்தானே நாம் சிதைத்தழித்தோம் என்ற உணர்வலைகள், ராஜபக்ஷக் களுக்கு ஏற்படப்போவதில்லை. ஏனெ னில் பேரினவாத மிருகத்தனத்தில் தடித் துப்போன அவர்கள் நெஞ்சங்களில் இத் தகைய மெல்லிய உணர்வுகளுக்கு இட மிலலை என்பது தெரிந்ததுதானே.

1956 இல் இதே போன்றுதான் இதே காலிமுகத்திடலில் அமைதியாக - காந் திய வழியில் - அஹிம்சை நெறியில் - மொழி உரிமைக்காப் போராடிய தமி ழர்களை சிங்களப் பேரினவாதம் கொடு ரமாகத் தாக்கி அநியாயம் செய்தது. அஹிம்சைப் போராளிகள் அருகில் இருந்த பேரா வாவிக்குள் தூக்கி வீசப்பட் டார்கள்.

சரித்திரம் திரும்பியிருக்கின்றது. அமைதி வழியில் போராடிய சிங்கள வர்களையே பேரினவாதம் அதே முறை யில் கையாள முற்பட்டது. அன்றைய தமி ழர்கள் போல இன்றைய சிங்களம் அமைதி, அஹிம்சை, அறம் பேண வில்லை. அதனால் தாக்க வந்தோர் தாக் கப்பட்டனர். தாக்கினோர் பேரா வாவிக்குள் தூக்கி வீசப்பட்டார்கள்.

அவர்கள் அந்த வாவிக்குள் உள்ளா டைகளுடன் பதை பதைத்து நிற்கும் காட்சிகளைப் பார்த்த போது முள்ளி வாய்க்காலில் நந்திக் கடலுக்குள்ளும் துரவுகளுக்குள்ளும் இப்படிச் சிக்கிக் கிடந்த நமது உறவுகளின் படங்கள் என் நினைவில் நிழலாடின.

அந்தப் படங்களில் இருந்த எவரும் இன்று இல்லை. பேரினவாதம் அவர்க ளைக் கபளீகரம் செய்து விட்டது என்பது மனதை நெருடும் உண்மை.

ஆனால், நேற்று பேரா வாவியில் சிக்கியவர்களைக் கடைசியில் கடற்படை வந்து மீட்டமையினால் ஆறுதல்.

விதி வலிது, அறம் விடாது. இன்னும் நாம் பார்ப்பதற்குப் பல இருக்கின்றன என நினைக்கிறேன்.

– மின்னல் –

## அலரி மாளிகையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
போராட்டக்காரர்கள் தொடர்ந்தும் அலரி மாளிகைக்குள் நுழைய முற்பட்டபோது அவர்களைக் கலைப்பதற்காக பொலி ஸார் வானத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர்.

அலரி மாளிகைக்குள் மஹிந்த ராஜபக்ஷ உட்படப் பொதுஜன பெரமுன வின் மிக முக்கியமான உறுப்பினர்கள் மறைந்து இருக்கின்றனர் என தகவல்கள் வெளியாகியமையை அடுத்தே ஆர்ப் பாட்டக்காரர்கள் உள்ளே நுழைய முற் பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின் றது.

# ஜனாதிபதிக்கு எதிராக அதிருப்திப் பிரேரணை!

## வாசகத்தை மாற்ற முடிவு

ஜனாதிபதிக்கு எதிராக சமர்ப்பிக்கப் பட்டுள்ள 'நம்பிக்கையில்லா பிரேர ணை'யை 'அதிருப்தி பிரேரணை'யாக மாற்றி நாடாளுமன்றத்தில் முன்னெடுப் பதற்கு சபாநாயகர் இணக்கம் தெரிவித் துள்ளார். நம்பிக்கையில்லா பிரேரணை (Motion of No Confidence) என்ற வாச கத்தை அதிருப்தி பிரேரணை (Motion of Displeasure) என்ற வாசகம் ஆக மாற்றி நாடாளுமன்ற நிகழ்ச்சிப் பத்திரத்தில் சேர்ப்பதற்கு நேற்றுக் காலை நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் சபா நாயகர் இணக்கம் தெரிவித்தார் என அறிய வந்தது.

நாளை புதன்கிழமை மீண்டும் கட்சித் தலைவர்கள் கூடும்போது புதிய வடிவத் தில் இந்த பிரேரணையை எப்போது விவாதத்துக்கு எடுப்பது என்பது தொடர் பில் தீர்மானிக்கப்படும் எனத் தெரி கிறது.


## University of Jaffna
## Vacancy - Post of Temporary Demonstrator - Faculty of Medicine

Applications are entertained from those who have passed the final examination of the MBBS degree obtained from the State Universities or UGC recognized foreign Universities. (Research experience in the relevant field is preferable)

Salary Scale :Rs 40,920.00 (Fixed)

Interested candidates with the required qualifications are requested to send scanned copies of relevant certificates along with their duly filled applications in the prescribed application format.

Application forms and other details are available in the Faculty of Medicine website: **http://www.med.jfn.ac.lk/wp-content/uploads/2021/01/APPLICATION-Form.pdf**

Applications with scanned copies of the relevant and required certificates should be sent on or before Monday, 23.05.2022 to the following email address: fomvacancy@univ.jfn.ac.lk

Prescribed application form downloaded from the website must accompany paid bank slip for the deposit of a sum of Rs.100.00 credited to the people's Bank Account No (Ref No): 970000090000387 in favor of Bursar, University of Jaffna.

The date of the selection interview for the above post will be notified to the eligible applicants via email.

Registrar
University of Jaffna
09.05.2022



காலைக்கதிர்
Kalaikkathir

### நாளை காலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பகுதிகளில் உள்ள பொது வீதிகள், ரயில் பாதைகள், பொதுப் பூங்காக்கள், பொது விளையாட்டு மைதானம் அல்லது கடற் கரைகளில் யாரும் தங்குவதற்கு அனுமதி இல்லை என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

### வீரகெட்டியவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

படுகாயமடைந்த சிலர் வீரகெடிய வைத்தியசாலையில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக தங்காலை வைத்தியசா லைக்கு மாற்றப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

வீரகெட்டியப் பிரதேச சபைத் தலை வரின் வீட்டுக்கு தீ வைப்பதற்காக சிலர் வருகை தந்துள்ளனர்.

இதன்போது மேற்கொள்ளப்பட்ட துப் பாக்கிப் பிரயோகத்தில் இருவர் உயிரி ழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### ஆர்ப்பாட்டக்காரர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

துப்பாக்கிச் சூட்டில் மூன்று பேர் காயம டைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட் டுள்ளனர். மேலும் ஒருவர் ஆபத்தான நிலையில் இருக்கிறார் எனக் கூறப்படுகி றது.

எவ்வாறாயினும் சம்பவத்தைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துக்கோரள உயிரிழந் துள்ளார் எனவும் சரியான காரணம் இன் னும் உறுதிப்படுத்தப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

எம்.பி. அந்த இடத்தை விட்டு ஓடி அரு கில் உள்ள கட்டடத்தில் தஞ்சம் அடைந் தார். ஆயிரக்கணக்கானோர் கட்டடத்தைச் சூழ்ந்தனர். பின்னர் அவர் தனது ரிவால் வரால் தன்னைத் தானே சுட்டுத் தற் கொலை செய்து கொண்டார். என்று பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார் எனக் கூறப்படுகின்றது.

### குமார வெல்கம...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அனுமதிக்கப்பட்டுள்ளார் என வைத்தி யசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

குமார வெல்கம மாகும்புர நோக்கி சென்றுக் கொண்டிருந்த போது இவ்வாறு இனந்தெரியாத குழுவினரால் தாக்கப் பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது

### அமெரிக்கா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காயமடைந்தவர்களுக்கு எங்கள் அனுதாபங்கள். இலங்கை முழுவதும் அமைதியாகவும் நிதானமாகவும் இருக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். என்றார்.

### மஹிந்தரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதியின் செயலாளரினால் விசேட வர்த்தமானி அறிவித்தல் நேற்று இரவு வெளியிடப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது இராஜினா மாக் கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பி யிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### கோபாவேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மொட்டுக் கட்சியினருக்கு எதிரான தாக்குதல் செய்திகள் வந்த வண்ணம் உள்ளன. ராஜபக்ஷக்களும் அவர்க ளுக்கு ஆதரவான முக்கியஸ்தர்களும் பெரும்பாலும் மக்கள் கண்ணில் படாமல் ஒளித்து விட்டனர்.

நள்ளிரவிலும், ஊரடங்குக்கு மத்தி யிலும், மக்கள் கூட்டம் கூட்டமாக ராஜபக் ஷக்களின் ஆதரவாளர்களைத் தேடி வேட்டை நடத்தி வருகிறார்கள் என நேற்று நள்ளிரவு கிடைத்த செய்திகள் தெரிவித் தன.

ஜனாதிபதியும் பிரதமர் உள்ளிட்ட அரசாங்கமும் உடனடியாகப் பதவி விலக வேண்டும் எனக் கோரி காலி முகத்திடலி லும் அலரி மாளிகைக்கு முன்னாலும் மக்களால் தன்னெழுச்சியாக முன்னெ டுக்கப்பட்டு வந்த 'கோட்டா கோ கம' மற்றும் 'மைனா கோ கம' போராட்டங் களின் மீது நேற்றுப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் எனக் கூறப்பட்டவர்களால் மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான கொடூர தாக்குதல் களையடுத்து சிறீலங்கா பொதுஜன பெர முனவைச் சேர்ந்த முன்னாள் அமைச் சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசியல்வாதிகள் மற்றும் அரசாங்கத்தின் தீவிர ஆதரவாளர்களின் வீடுகள், வாகனங்கள், அவர்களுக்குச் சொந்தமான ஹோட்டல்கள் உட்பட உடைமைகள் அடித்து நொறுக்கப்பட்டன. தீ வைத்துக் கொளுத்தப்பட்டுமுள்ளன.

அரசாங்கத்துக்கு ஆதரவானவர்க ளுக்கும் எதிரானவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதல்கள் பாரிய கலவரமாக மாற்றமடைந்தமையை அடுத்து ஆவேச மடைந்த –அரசாங்கத்துக்கு எதிரானவர் களால் – நாடு முழுவதுமுள்ள பொதுஜன பெரமுன அரசியல்வாதிகளின் வீடுக ளைத் தேடித் தீயிட்டு வருகின்றனர்.

மிகவும் பாரம்பரியமானதும் பல குடும்பத் தலைமுறை வரலாறுகளையும் கொண்டதுமான அம்பாந்தோட்டை மெத முலனவில் உள்ள ராஜபக்ஷ குடும்பத் தின் பூர்வீக வீடு – கால்டன் ஹவுஸ் – தீக்கிரையாக்கப்பட்டது.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜ பக்ஷவின் குருநாகல் இல்லமும் தீ வைக்கப்பட்டுள்ளது. மெதமுலனவில் அமைந்துள்ள டீ.ஏ.ராஜபக்ஷ நூதனசா லையும் தீக்கிரையானது.

காலி முகத்திடலில் போராட்டக் காரர்கள் மீது தாக்குதல் நடத்திய கும்ப லுக்குத் தலைமை தாங்கிய முன்னாள் அமைச்சரும் பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினருமான சனத் நிஷாந்தவின் வீடு அடித்து நொருக்கப்பட்டு முற்றாகத் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சரும் ஆளும் கட்சியின் முன்னாள் பிரதம கொறடாவுமா கிய ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் வீடும், பொதுஜன பெரமுனவின் குருநா கல் மாவட்ட கட்சி அலுவலகமும் தீ வைத் துக் கொளுத்தப்பட்டன.

முன்னாள் அமைச்சர்கள் பிரசன்ன ரணதுங்க, காமினி லொக்குகே, காஞ்சன விஜேயசேகர, நிமல் லன்ஸா, இந்திக்க அனுருத்த, ரமேஷ்பத்திரண, திஸ்ஸ குட் டியாராய்ச்சி, கனக ஹேரத், அருந்திக்க பெர்னான்டோ ஆகியோரின் வீடுகளும் அடித்து உடைக்கப்பட்டு தீவைக்கப்பட்டன.

இதேவேளை மொரட்டுவ மேயரின் வீடும் தீ வைத்து அழிக்கப்பட்டது. முன் னாள் அமைச்சர் ரோகித அபே குணவர்த் தனவின் களுத்துறை அலுவலகமும் தீ வைக்கப்பட்டுள்ளது.

இதே வேளை மொட்டுக் கட்சி அரசியல் வாதிகளின் வாகனங்கள் பலவும் தீக்கி ரையாக்கப்பட்டுள்ளன. இந்தத் தீ வைப் புச் சம்பவங்கள் நேற்று இரவு முழுவதும் தொடர்ந்து நடைபெற்ற வண்ணம் இருந்தன.

### மஹிந்தவைக் கைது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூட்டமைப்பின் பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித் துள்ளார்.

தயவு செய்து அமைதியைப் பேணுங் கள். வன்முறையற்ற போராட்டமே மாற் றத்தை ஏற்படுத்தும். இத்தனை காலம் பேணிய சாத்வீக முறையைத் தொடருங் கள். வன்முறைக்கு இடம் கொடுக்க வேண்டாம் எனவும் அவர் மேலும் கூறி யுள்ளார்.

இதேவேளை அமைதியான மற்றும் நியாயமான மக்களின் போராட்டத்தின் மீது தாக்குதல் நடத்துமாறு சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர் களுக்கு அழைப்பு விடுத்த முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் மொறட்டுவை மேயர் சமன்லால் பெர்னாண்டோ ஆகி யோரை உடனடியாகக் கைது செய்ய வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வலியுறுத்தி யுள்ளார்.

தாக்குதல் நடத்தியவர்கள் பஸ்களில் இருந்து தடிகளை எடுத்துச் செல்லத் திட்ட மிட்டிருந்தனர். தேர்தல் காலத்தில் கூட வன்முறையில் ஈடுபட்ட அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அலரிமாளிகையில் இருந்து காலி முகத்திடலுக்குச் சென்றுள்ளனர். மனித உரிமை மீறல் விடயத்தில் அரசாங்கம் இருக்கவேண்டிய இடத்தில் சிக்கியுள்ளது. இவ்வாறானதொரு நிலை ஏற்படும் என ஆறு மாதங்களுக்கு முன்னரே கூறியி ருந்தேன். ஆனால் அரசாங்கம் அத னைக் கவனத்தில் கொள்ளவில்லை.

முன்மொழிவுகள் ஏற்றுக்கொள்ளப் பட்டிருந்தால் இரண்டு வாரங்களுக்கு முன்னரே அரசாங்கம் அமைக்கப்பட் டிருக்கும். அவ்வாறு இருந்திருந்தால் இந்தக் காட்டுமிராண்டித்தனமான தாக் குதல் தவிர்க்கப்பட்டிருக்கும்.

நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டிப் பெரும்பான்மைப் பலமுள்ள ஒரு வரைப் பிரதமராக நியமித்து, அரசாங் கத்தை அமைத்து, நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதற்கு சபாநாயகர் உடன டியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்தார்.

## வன்முறையைத் தூண்டிய அரசியல்வாதிகள் இனி மக்கள் பிரதிநிதிகளாக இருக்கவியலாது

### நான்கு பிரதான பௌத்த பீடங்கள் அறிவிப்பு

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக் கான தீர்வை வலியுறுத்தி அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந் தவர்கள் மீது தாக்குதல்கள் நடத்துவதற்கு ஒத்துழைப்புக்களை வழங்கிய அரசியல் வாதிகள் தொடர்ந்தும் மக்கள் பிரதிநிதி களாக செயற்பட பொருத்தமற்றவர்கள் என்று நான்கு பிரதான பௌத்த பீடங்கள் தெரிவித்துள்ளன.

மல்வத்து பீடத்தின் மகாநாயக்க திப் பட்டுவாவே சிறீ சுமங்கல தேரர், அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க வரகாகொட சிறீ ஞானரத்ன தேரர், அமரபுர மகா பீடத் தின் மகாநாயக்க தொடம்பஹல சிறீ சந் திரசிறி தேரர் மற்றும் ராமஞ்ஞ மகா பீடத் தின் மகாநாயக்க மகுலேவி சிறீ விம லாஹிதான தேரர் ஆகியோர் கையெழுத் திட்டு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள அனைத்து மக்களின் வாழ்க்கை, சொத்துக்கள் மற்றும் கருத்து வெளியிடும் சுதந்திரம் என்பவற்றைப் பாதுகாக்கும் பொறுப்பு அரசமைப்பின் மூலம் அரசியல் தலைவர்களுக்கு உரித் தாக்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிலை யில் வன்முறையைத் தூண்டி குறுகிய அரசியல் நோக்கத்திற்காக செயற்பட்ட அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

இவ்வாறான நிலைமையைக் கட்டுப் படுத்துவதற்கு தற்போதாவது உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண் டும்.– என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புத்தளம் அலிசப்ரி ரஹீமின் வீட்டின் மீது இரவு தாக்குதல்



முஸ்லிம் தேசிய கூட்டமைப்பின் புத் தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீமின் வீட்டின் மீது இனந் தெரியாத குழுக்களால் நேற்றிரவு தாக் குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புத்தளம் வான் வீதியில் உள்ள நாடா ளுமன்ற உறுப்பினரின் உத்தியோகபூர்வ வீட்டின் மீதே இவ்வாறு தாக்குதல் நடத் தப்பட்டுள்ளது.

இதன்போது , நாடாளுமன்ற உறுப் பினரின் உத்தியோகபூர்வ இல்லம், அவ ரது அலுவலகம் என்பனவற்றின் மீது இனந்தெரியாத குழுக்களினால் தாக் குதல் நடத்தப்பட்டுள்ளது. மோட்டார் சைக் கிள் உள்ளிட்ட வாகனங்களும் தீயிட்டு கொளுத்தப்பட்டுள்ளன.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினரான அலிசப்ரி ரஹீம், கடந்த பாராளுமன்ற பொதுத் தேர்தலில் முஸ் லிம் தேசிய கட்டமைப்பு சார்பில் போட்டி யிட்டு நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவானார்.

அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட 20 ஆவது திருத்த சட்டத்திற்கு ஆதரவு வழங்கியமை முதல் இன்றுவரை அரசு சார் உறுப்பினராக அவர் செயற்பட்டு வரு கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ராஜபக்ஷ ஆதரவாளர்களை ஏற்றி வந்த பஸ்களின் கதி!

மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாளர் களைக் கொழும்பு நோக்கி ஏற்றி வந்த பஸ்களின் தற்போதைய நிலைமை இது:–




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பிணம் தின்னும் சாத்திரங்கள்

'செத்தும் கொடுத்தான் சீதக்காதி' என்பார்கள். அதுபோல பிரதமர் பதவியை விட்டு இறங்கும்போதும் தனது கைவரிசையைத் தவறாமல் காட்டிச் சென்றிருக்கின்றார் மஹிந்த ராஜபக்ஷ.

பதவியை ராஜினாமாச் செய்யப்போகும் தினத்தில் இப்படி எம்.பிமார், உள்ளூராட்சி உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களின் கூட்டம் என்ற பெயரில் ஓர் அடாவடித்தனமான கும்பலை அலரி மாளிகையில் கூட்ட வேண்டிய தேவை ஏதும் இருக்கவில்லை. பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரி மாளிகையை இப்படி பல்லாயிரக் கணக்கானோரைத் திரட்டி விருந்து வைத்து, ஆர்ப்பாட்டம் பண்ணி, அட்டகாசம் செய்யும் மையமாக மாற்றியவரே மஹிந்த ராஜபக்ஷதான்.

அதை விட்டுத் தாம் வெளியேற வேண்டிய நாளில் அந்த இடத்தை ரணகளத்துக்கான சதிமையமாக அவர் மாற்றிச் சென்றிருக்கின்றார்.

ராஜபக்ஷக்களின் நிர்வாகத்தினால் நாட்டுக்கு ஏற்பட்ட பாதிப்பும் பின்னடைவும் அளவிட முடியாதவை. அதற்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்திருக்கின்றார்கள் என்பது மூத்த அரசியல்வாதியான ராஜபக்ஷவுக்கு நன்கு தெரியும்.

2019 ஜனாதிபதித் தேர்தலிலும், 2020 நாடாளுமன்றத் தேர்தலிலும் மக்களைப் பிழையாக வழி நடத்தி, தாங்கள் சுவீகரித்துக் கொண்ட வாக்குப்பலத்தை வைத்துக் கொண்டு தங்களின் தொடரும் அடாவடி அரசியலை ராஜபக்ஷக்கள் நியாயப்படுத்திக் கொண்டிருந்தாலும் –

அவர்களின் ஆட்சிப் பீடத்துக்கு எதிராகக் கிளர்ந்திருக்கும் மக்களின் சீற்றம் யாது என்பது அவருக்கு நன்கு தெரியும்.

முழு நாடுமே ராஜபக்ஷ ஆட்சிப் பீடத்துக்கு எதிராகக் கிளர்ந்துள்ள போதிலும் நேற்று மதியம் வரை தமது எதிர்ப்பு நடவடிக்கைகளில் – அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் – மக்கள் ஓர் ஒழுங்கை – சட்டத்தை மதித்து நடக்கும் பண்பியல்பை பேணியே வந்தனர். அந்த மாண்பை சில தினங்களுக்கு முன்னர் இந்தப் பத்தியில் நாம் மெச்சி, சிலாகித்தும் இருந்தோம்.

பொது மக்களின் இந்த மாண்பை – பண்பை – மஹிந்த ராஜபக்ஷ உட்பட்ட தரப்பினர், குறிப்பாக ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ போன்றோர் பிழையாக அர்த்தம் பண்ணி விட்டனர் போலும்.

குளவிக் கூட்டுக்குக் கல்லெறிந்தமை போன்ற காரியத்தைப் பண்ணி நாடு முழுவதிலும் பெரும் களேபரத்தை ஏற்படுத்தி விட்டனர்.

தமிழர் தாயகத்தை அனைத்துப் பக்கங்களாலும் முற்றுகையிட்டு, வெளியுலகுடனான தொடர்புகளைத் துண்டிக்கச் செய்து விட்டு, மனித குலத்துக்கே பொருத்தமற்ற நாச வேலைகளை, மனித உரிமை மீறல்களை, யுத்தக் குற்றங்களைப் புரிந்த ராஜபக்ஷக்கள், அதே பாணி அணுகுமுறையை தலைநகர் கொழும்பில் அரங்கேற்றப் பாத்திருக்கின்றார்கள். உலகின் பல்லாயிரம் கண்கள் குவிந்திருக்கும் மக்கள் போராட்டக் களம் மீது அராஜகம் பண்ணிய ராஜபக்ஷக்களின் உண்மைச் சொரூபம் அதனால் அம்பலமாகி விட்டது.

ஆனால் அவர்கள் தூண்டி விட்ட இந்த அராஜகத்தின் விளைவு – அதிர்வுகள் – நாட்டில் உடனடியாக அடங்கி விடப்போவதில்லை. சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்து விட்டனர். அவர்கள் ஆட்சிப் பீடத்திலிருந்து முற்றாக அகலும் வரை இந்த நாட்டுக்கு அமைதி என்பது சாத்தியப்படப் போவதில்லை என்பதும் தெரிந்தது தான்.

இங்கு நடப்பவற்றைத்தானோ, 'பேய் அரசாண்டால் பிணம் தின்னும் சாத்திரங்கள்!' – என்றார்கள்?

# ஜனாதிபதி,பிரதமர்,பொலிஸ் மா அதிபர் மூவரும் உடனே பதவி விலக வேண்டும்!

## தமிழ்க் கூட்டமைப்பு கோருகின்றது

அமைதியாக, ஜனநாயக முறையில், வன்முறையற்று சுமார் ஒரு மாத காலம் போராட்டம் நடத்தி வந்த மக்கள் மீது காடையர்களை ஏவித் தாக்குதல் நடத்த காரணமாக இருந்த ஜனாதிபதி, பிரதமர் மற்றும் இந்தக் காடைத்தனத்தைத் தடுக்காமல் பார்த்திருந்த பொலிஸினுடைய தலைமையதிகாரி என்ற முறையில் பொலிஸ்மா அதிபர் ஆகியோர் பதவி விலக வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பகிரங்க கோரிக்கை விடுத்திருக்கின்றது.

கூட்டமைப்பு சார்பில் அதன் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இந்த கோரிக்கையை முன் வைத்திருக்கிறார்.

பிரதமரின் அலுவலகத்தில் ஒன்றுகூடிய காடையர் அங்கிருந்து காலிமுகத்திடல் வரை அட்டகாசம் புரிந்து கொண்டு இரண்டு கிலோ மீற்றர் தூரம் நடந்து வந்திருக்கிறார். அவ்வளவு தூரம் அவர்கள் முன்னேறும் வரை பொலிஸ் தடுக்காமல் பார்த்துக் கொண்டிருக்கின்றது. மக்களின்பாதுகாப்புக்கு பொறுப்பான ஜனாதிபதியும், காடையர்களைதூண்டிவிட்ட பிரதமரும், இந்தக்காடைத்தனத்தைத் தடுக்கத் தவறிய பொலிஸின் பொறுப்பாளர் பொலிஸ் மா அதிபரும் தங்கள் பதவிகளை ராஜினாமா செய்வதுதான் தார்மீகப் பொறுப்பாகும். – இவ்வாறு சுமந்திரன் கூறியிருக்கிறார்.

# எந்தவொரு தியாகத்தையும் செய்ய நான் தயாராகவுள்ளேன்!

## மஹிந்த பகிரங்க அறிவிப்பு

கொழும்பு, மே 10

நாட்டு மக்களுக்காக எந்தவொரு தியாகத்தையும் செய்ய தாம் தயார் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

நேற்று நண்பகல் தனது பதவியை ராஜினாமாச் செய்ய முன்னர் அலரிமாளிகையில் தமது ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில் –

அரசியல் இலாபங்களுக்காக நாட்டை அராஜகமாக்க விரும்பவில்லை. நாட்டைச் சீர்குலைக்க நாங்கள் விரும்பவில்லை. சவால்களை எதிர்கொண்டு சவால்களைச் சமாளிப்பதுதான் எனது கொள்கை. சவால்களைக் கண்டு தப்பித்து ஓடும் பழக்கம் எங்களிடம் இல்லை. அவற்றுக்கான முன்னுதாரணங்களை நாங்கள் உருவாக்கியுள்ளோம்.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் எதிர்க்கட்சிகள் அதன் சொந்த அரசியல் நிகழ்ச்சி நிரலைப் பின்பற்றுகின்றன. அவர்களுக்குத் தேவையானது அதிகாரம் மட்டுமே. ஜனாதிபதிக்கு எவ்வித தடையின்றி முடிவெடுக்க முடியும். பொதுநலன் கருதி ஒரு முடிவு எடுக்கப்பட்டால் அதற்காக எந்தத் தியாகத்தையும் செய்யத் தயார்.

நீங்கள் என் மீது வைத்த நம்பிக்கைதான் என்னை அரசியலுக்கு வர வைத்தது. இப்போது என்ன செய்வது என்று நான் உங்களிடம் கேட்கிறேன்.

உங்களுடன் ஒரு முடிவுக்கு வர நாங்கள் தயாராக இருக்கிறோம். முதலில் தாய்நாடு, இரண்டாவது தாய்நாடு, மூன்றாவது தாய்நாடு. உங்கள் அனைவருக்கும் நல்வாழ்த்துக்கள் எனக் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகக் கூடாது என வலியுறுத்தி நேற்று அலரி மாளிகை பகுதியில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதேவேளை பிரதமர் பதவி விலகினால் அரசியல் நெருக்கடி உருவாகும் என அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ அறிவித்திருந்தார். இதனையடுத்து மக்கள் முன் உரையாற்றிய பிரதமர், மக்களுக்காக எடுக்கப்படும் எந்தவொரு தீர்மானத்தையும் ஏற்றுக்கொள்ளத் தயார் எனவும், பொது மக்களுக்காக எந்தவொரு தியாகத்தையும் செய்யத் தயார் எனவும் அறிவித்தார்.

# ராஜபக்ஷ குடும்பத்தின் பூர்வீக இல்லம் தீக்கிரை









மிகவும் பாரம்பரியமானதும் பல குடும்பத் தலைமுறை வரலாறுகளையும் கொண்டதும் அம்பாந்தோட்டை மெதமுலனவில் அமைந்துள்ள ராஜபக்ஷ குடும்பத்தின் பூர்வீக வீடு அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களால் நேற்று இரவு அடித்து உடைத்துத் தீக்கிரையாக்கப்பட்டது. மெதமுலனவில் அமைந்துள்ள ராஜபக்ஷக்களின் தந்தையின் நினைவாகக் கட்டப்பட்டிருந்த டீ.ஏ.ராஜபக்ஷ நினைவாலயமும் நூதனசாலையும் கூடத் தீக்கிரையாகின.

முன்னாள் பிரதமர் மகிந்த ராஜக்ஷவின் குருநாகல் இல்லமும் போராட்டக்காரர்களால் தீ வைக்கப்பட்டு அழிக்கப்பட்டது.

# அவசரகாலச்சட்டம் பிரகடனப்படுத்தியுள்ளமை மக்களின் ஜனநாயக குரலை ஒடுக்கும் செயல்

## இரா.துரைரெத்தினம் கருத்து



மக்கள் வீதிக்கு இறங்கிய நிலையில் ஜனாதிபதி அவசரகாலச் சட்டத்தைக் குறிப்பிட்ட காலங்கள் வரையும் பிரகடனப்படுத்தி உள்ளமை என்பது மக்களின் ஜனநாயகக் குரலை ஒடுக்குவதோடு, பொலிஸாரின் தன்னிச்சையான போக்குகளையும், அரசபடையின் கண் மூடித்தனமான செயற்பாடுகளையும் ஜனாதிபதியின் சர்வாதிகார ஆட்சியையும் திணிக்கும் செயலே என முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர், ஈ.பி.ஆர்.எல்.எவ். இரா.துரைரெத்தினம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

ஜனாதிபதியையும், பிரதமர் உட்பட குடும்பத்தார் அனைவரையும் இராஜினாமா செய்யுங்கள் என ஒரு மாத காலமாக ஜனநாயக முறைப்படி எந்தவித வன்முறையும் இல்லாமல் மனித உரிமை எதையும் மீறாமல் நாடு பூராகவும் வெகுசன ரீதியான போராட்டங்களை மூவின சமூகங்களும் தனிநபராகவும், அமைப்பு ரீதியாகவும், கட்சி ரீதியாகவும் நடத்தி வருகின் றமை நாம் அனைவரும் அறிந்த விடயமே.

ஒரு மாதகாலமாகியும் மக்களின் துன்ப துயரங்களுக்கு ஒரு முடிவின்றி மக்கள் பரிதவிக்கின்ற நிலையில், மக்களின் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காணுவதற்கு ஆட்சியாளர்கள் தவறு விட்டமை காரணமாக ஆட்சியாளர்கள் ஒதுங்கி மக்களின் துயர்களைத் துடைக்கக் கூடியவர்களின் கையில் செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்த வழி விடுமாறு மக்கள் வீதிக்கு இறங்கியுள்ளனர்.

இந்நிலையில், ஜனாதிபதி அவசரகாலச் சட்டத்தைக் குறிப்பிட்ட காலங்கள் வரையும் பிரகடனப்படுத்தி உள்ளமை என்பது மக்களின் ஜனநாயக குரலை ஒடுக்குவதோடு, பொலிஸாரின் தன்னிச்சையான போக்குக்களையும், அரசபடையின் கண் மூடித்தனமான செயற்பாடுகளையும் ஜனாதிபதியின் சர்வாதிகார ஆட்சியையும் திணிக்கும் செயலே. – எனக் குறிப்பிட்டுள்ளார். இதை தடுத்து நிறுத்த மக்கள் அணிதிரளாத பட்சத்தில் வீடுவீடாகச் சென்று காணாமலாக்கப்படுகின்ற சம்பவங்கள் தொடரும். எனவே இதைத் தடுத்து நிறுத்த மக்கள் அனைவரையும் அணிதிரளுமாறு அறைகூவல் விடுத்துள்ளார்.

## கடனுதவித் திட்டத்தின்கீழ் நீர்த் தாரை பிரயோகிக்கும் வாகனம் இந்தியாவிடம் இறக்குமதி செய்யப்படவில்லை

### செய்திகளை மறுக்கிறது இந்திய உயர் தூதரகம்

இந்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்ட கடனுதவி திட்டங்களின் கீழ் இலங்கை அரசாங்கத்தால் நீர்த்தாரை வாகனம் ஒன்று இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை என்று கொழும்பிலுள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

மேற்படி செய்தி அறிக்கைகளில் எந்தவிதமான உண்மைத்தன்மையும் இல்லை. இந்தியாவால் இலங்கைக்கு வழங்கப்பட்ட எந்தவொரு கடனுதவி திட்டங்களின்கீழும்நீர்த்தாரைவாகனங்களெதுவும் இந்தியாவால் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. தற்போதைய சூழலில் இலங்கை மக்களுக்குத் தேவையான உணவுப்பொருள்கள், மருந்து மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருள்கள் போன்றவற்றுக்காகவே ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி வழங்கப்பட்டது.

இலங்கை மக்கள் தற்போது எதிர்கொள்ளும் சவால்களை முறியடிப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சிகள் மற்றும் ஒத்துழைப்புகளுக்கு இவ்வாறான தவறான அறிக்கைகள் எந்தவிதமான ஆக்கபூர்வமான பங்களிப்பையும் வழங்கப்போவதில்லை என்று இந்திய உயர் தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது.

## போதைப்பொருளுடன் இளைஞர் திருகோணமலையில் கைதாகினார்



திருகோணமலை – மிகிந்தபுர பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த குற்றச் சாட்டின் பேரில் இளைஞரொருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றது.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் திருகோணமலை பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து குறித்த சந்தேகநபரை சோதனையிட்டபோது அவரிடமிருந்து 10 கிராம் 550 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் கிண்ணியா–அண்ணல் நகர் பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய இளைஞர் என பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. நீண்ட நாள்களாக கிண்ணியா பிரதேசத்தில் ஹெரோயின் போதைப் பொருளை விற்பனை செய்து வந்த நிலையில் சந்தேக நபர் தொடர்பாக வந்த இரகசியத் தகவலையடுத்து அவரை பின்தொடர்ந்த பொலிஸார் சோதனையிட்ட போது அவரிடமிருந்து ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதாகவும் கிண்ணியா பொலிஸாரால் ஹெரோயின் போதைப் பொருளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் இரண்டு வழக்குகள் ஏற்கனவே அவர் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளன எனவும் விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்டசந்தேக நபரை திருகோணமலை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் உப்புவெளி பொலிஸார் தெரிவித்துள்னர்.

## இந்தியாவை அடுத்து இலங்கைக்கு உதவ முன்வந்துள்ள பங்களாதேஷ்

இலங்கை பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில் நாணய பரிமாற்ற ஒப்பந்தத்தின் கீழ் இலங்கைக்கு வழங்கப்பட்ட 20 கோடி டொலர் கடனின் காலத்தை மேலும் ஒரு வருடத்துக்கு பங்களாதேஷ் நீடித்துள்ளது.

பங்களாதேஷ் வங்கியின் இயக்குநர்கள் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில், கடனுக்கான நிபந்தனைகளை மாற்றாத வகையில் இந்த முடிவை எடுத்ததாக பங்களாதேஷ் மத்திய வங்கியின் பேச்சாளர் செராஜுல் இஸ்லாம் தெரிவித்தார்.

பங்களாதேஷ், 2021 ஆண்டு மே மாதத்தில் இலங்கையுடன் ஒப்பந்தம் மேற்கொண்டது.

இதன்படி பெற்றுக்கொண்ட கடனை, இலங்கை மூன்று மாதங்களுக்குள் திருப்பிச் செலுத்த வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

எனினும் நாட்டின் பொருளாதார நெருக்கடி தீவிரமாகியமையால், இலங்கையின் கோரிக்கையின் பேரில் கால அவகாசம் பல முறை நீடிக்கப்பட்டது.

இதன் ஒரு கட்டமாகவே தற்போதும் நீடிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## ரவீந்திரநாத் தாகூரினுடைய 161 ஆவது பிறந்ததினம் யாழில்!







(கலையமுதன்)

இந்திய பல்துறையறிஞர் ரவீந்திரநாத் தாகூரினுடைய 161 ஆவது பிறந்த தின நிகழ்வை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் கண்காட்சியொன்று இடம்பெற்றது.

யாழிலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் நக்கா வீதியிலுள்ள கலைத்தூது கலாமுற்றத்தில் இந்திய கைவினை பொருள்களுடன் இந்திய கலை மற்றும் கலாசாரம் சம்பந்தமான இந்தக் கண்காட்சி இடம்பெற்றது.

இதன்போது ரவீந்திரநாத் தாகூருடைய உருவப்படத்துக்கு மாலை மலரஞ்சலி செலுத்தப்பட்டதுடன் நிகழ்வை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்களும் இதன்போது வழங்கிவைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் யாழிற்கான இந்தியதுணைத்தூதர்ராகேஷ்நட்ராஜ்ஜெயபாஸ்கரன், வடமாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் யாழ்ப்பாண பல்கலைக்கழக பேராசிரியர் கண்ணதாசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# நிம்மதியாக வாழமுடியாத நிலையில் நாட்டின் தலைவர்!

## கலையரசன் தெரிவிப்பு



மனிதன் அன்றறுப்பான், தெய்வம் நின்றறுக்கும் என்று சொல்லுவார்கள் அதுதான் இந்த நாட்டிலே இன்று நடந்துகொண்டிருக்கின்றது. தமிழர்களுக்கு இழைத்த வினை இந்த நாட்டின் தலைவர் இன்று நிம்மதியாக வாழ முடியாத நிலைமையை ஏற்படுத்தியிருக்கின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று கோளாவில் அறுத்த நாக்கொட்டீஸ்வரர் கூட்டுப் பிரார்த்தனை சபையின் ஓராண்டு நிறைவு விழாவில் அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஓராண்டு நிறைவு விழா கோளாவில் பல்நோக்கு மண்டபத்தில் பெ.சண்முகம் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவிக்கையில் –

எமது சமூகத்திலே ஆன்மீகக் கருத்துக்களை எடுத்துச் செல்லக் கூடிய இளைஞர்கள் மிகவும் குறைவாக இருக்கின்ற காலகட்டத்தில்கோளாவில்பிரதேசத்திலே எமது இனம், மதம், சமூகத்துக்காக முன்நின்று உழைக்கும் இளைஞர்களைப் பார்த்து மிகவும் சந்தோசமடைகின்றேன். நிச்சயமாக இந்த இளைஞர்கள் எதிர்காலத்தில் நல்ல தலைவர்களாக எமது சமூகத்தை வழிநடத்துவார்கள். எமது தமிழுக்காவும், சமூகத்துக்காகவும், மதத்துக்காகவும் எவ்வாறான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றீர்களோ இதே அடிப்படையில் எமது மண்ணிலே தமிழ் நிலைத்திருக்க வேண்டும் என்பதற்காகவே எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் செயற்பட்டு வருகின்றது. அதற்கான பலத்தைச் சேர்ப்பவர்களாக நீங்கள் இருந்து கொண்டிருக்கின்றீர்கள்.

இந்து மதம் காலத்தால் முற்பட்டது. ஆனால் எந்த இடத்திலும் எமது மதத்துக்கான தனித்துவம் இல்லை என்பது தான் இன்று ஒரு மனவேதனையான விடயம். இந்த நாட்டிலே பூர்வீகக் குடிகளாக இருக்கின்ற எமது இனத்துக்கும் மதத்துக்கும் ஓர் அந்தஸ்து இல்லை. வரலாற்றுச் சிறப்புமிக்க பல ஆலயங்கள் இன்று எமது மத ரீதியான அடையாளங்கள் அழிக்கப்பட்டு மாற்று மதத்தவரால் ஆக்கிரமிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற வரலாறுகள் அதிகம் இருக்கின்றன. உதாரணமாக கதிர்காமத்தைச் சொல்லலாம். தேவார, புராணங்களில் பாடப்பட்ட கதிர்காமத்திலே தற்போது என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது? தற்போதைய இந்த நாட்டின் அரச தலைவர் தான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர், தான் பெரும்பான்மை மக்களின் வாக்குகளைப் பெற்றவன், இது ஒரு பௌத்த நாடு என்ற ஆணவப் போக்கை அன்று ஆரம்பித்தார். ஆனால், இன்று அவரின் நிலை என்ன? நாட்டின் அனைத்து பக்கங்களிலும் அவருக்கான எதிர்ப்பலைகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன.

அவர் நல்ல மனநோக்கோடு இந்த நாட்டின் பொறுப்பை எடுக்கவில்லை. இந்த நாட்டை நாசம் செய்ய வேண்டும் என்றே தான் அவர் இந்த நாட்டின் தலைவராக உருவாக்கப்பட்டார். இன்று இந்த நாட்டை நாசம் செய்து அழித்த ஒரு தலைவராக அனைத்து இன மக்களாலும் பாக்கப்படும் தலைவராகவே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ திகழ்கின்றார். தற்போது நாடாளுமன்றத்தில் என்ன நடக்கின்றது என அனைவரும் அறிவார்கள். எமது இனத்தின் விடயங்களை நாங்கள் பேசுகின்ற போது நாட்டில் தற்போது பொருளாதார ரீதியான பிரச்சினைகள், நிர்வாக நடைமுறைகள் சீராக இல்லை என்ற நிலைமைகள் எழுந்துள்ளன. ஒரு நாட்டுக்குப் பொருத்தமான ஒரு தலைவர் கிடைக்க வேண்டும். அவ்வாறானதொரு தலைவர் இலங்கைக்கு கிடைக்கப்பெறவில்லை. அதனால் நாங்கள் இன்று மோசமான துன்பங்களை அடைந்து கொண்டிருக்கின்றோம்.

எங்களுடைய மக்கள் நீண்ட காலமாகப் போராடி இனரீதியாக அழிக்கப்பட்டு, மீள்குடியேற்றங்கள் இல்லாமல், ஜனநாயகம், நீதி என்பன இல்லாமல் இருந்த காலங்களையெல்லாம் நாங்கள் எண்ணிப் பார்க்கின்றோம். மனிதன் அன்றறுப்பான், தெய்வம் நின்றறுக்கும் என்று சொல்லுவார்கள் அதுதான் இந்த நாட்டிலே இன்று நடந்துகொண்டிருக்கின்றது. எங்களுக்கிளைத்த வினை இந்த நாட்டின் தலைவர் இன்று நிம்மதியாக வாழ முடியாத நிலைமையை ஏற்படுத்தியிருக்கின்றது. எனவே, இந்த நாடு ஒரு நல்ல நிலைக்கு வர வேண்டும். அதற்கு மூவின மக்களும் ஒன்றுபட வேண்டும். அந்த ஒற்றுமையின் மூலம் இந்த நாட்டின் தற்போதைய ஜனாதிபதி, பிரதமர் பதவி விலகி ஒரு பொதுவான ஆட்சி உருவாக்கப்படுகின்ற போதுதான் இந்த நாட்டின் பொருளாதாரம் மேலோங்கி வரும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

ஆனால், இதே நிலைமை நீடித்தால் போகின்ற போக்கில் எதிர்காலத்தில் அரச உத்தியோத்தர்களுக்குக் கூட சம்பளம் வழங்க முடியாத ஒரு நிலை உருவாகிக் கொண்டிருக்கின்றது. இந்தியா என்கின்ற நாடு நேசக் கரம் நீட்டவில்லை என்றால் இந்த நாட்டின் நிலை இன்னும் படு மோசமாக இருந்திருக்கும் என்று தெரிவித்தார்.

# பொருளாதார நெருக்கடியிலிருக்கும் மக்களை சட்ட நெருக்கடிக்கு உட்படுத்துகின்றது அரசு!

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார்



அவசரகாலச் சட்டத்தை அரசாங்கம் மீண்டும் பிறப்பித்திருப்பது நாட்டுக்கு தீங்கையே விளைவிக்கும். மேலும் நெருக்கடியை அதிகரித்து, நிலைமையை மோசமாக்கும்.

ஆகவே உடனடியாகவே ஜனாதிபதி அவசரகாலச்சட்டத்தை இரத்துச் செய்து நீக்க வேண்டும் என்று சமத்துவக் கட்சி கேட்டுள்ளது.

இது தொடர்பாக சமத்துவக்கட்சியின் பொதுச் செயலாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இன்று நாட்டுக்குத் தேவையானது, சுமை குறைப்பே தவிர, சுமை கூட்டுதல் அல்ல. மக்கள் பொருளாதார நெருக்கடியிலிருந்தும் அரசியல் நெருக்கடியிலிருந்தும் மீள்வதற்கே விடுபடுவதற்கே விரும்புகிறார்கள்.

அதையே அரசாங்கம் செய்ய வேண்டும். மக்களுக்கு இன்று பெற்றோலும் டீசலும் எரிவாயுவும் உணவுப் பொருள்களுமே தேவை.

இதனோடு தமது நெருக்கடிகளைத் தீர்த்து நல் வாழ்வுக்கு உதவக்கூடிய ஆட்சியையே அவர்கள் விரும்புகிறார்கள். அவற்றை வழங்குவதற்குப் பதிலாக அவசரகாலச் சட்டத்தை அரசாங்கம் வழங்குகிறது. இது அரசாங்கத்தின் இயலாமையையே காட்டுகிறது. மக்களுக்குத் தேவையானதை வழங்குவதற்குப் பதிலாக மக்களுக்குத் தேவையில்லாத, மக்கள் விரும்பாத அவசரகாலச் சட்டத்தை - அரசாங்கம் திணிக்க முயற்சிப்பது தவறானதாகும்.

பொருளாதார நெருக்கடி, அரசியல் நெருக்கடி போன்ற வற்றால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களை சட்டத்தாலும் நெருக்கடிக்குட்படுத்துவது நியாயமற்றது.

அவசரகாலச் சட்டத்தை மக்கள் விரும்பவில்லை. மக்கள் மட்டுமல்ல, இந்த நாட்டிலுள்ள அரசியற் கட்சிகள் தொடக்கம் சர்வதேச சமூகம் வரை எவருமே விரும்பவில்லை.

அவசரகாலச் சட்டத்தைப் பிறப்பிப்பதன் மூலம் நாடும் அந்தக் காலகட்டமும் மோசமான நிலைக்குத் தள்ளப்படுவதே உலக அனுபவமாகும். இதனால்தான் உலகம் இன்று அவசரகாலச் சட்டத்துக்கு எதிராக நிற்கிறது. இந்த உலக அனுபவத்தையும் இலங்கையின் கடந்த கால அனு பவங் களையும் புறக்கணித்து விட்டு, மக்களுக்கு எதிரான சட்டத்தை அரசாங்கம் பிடிவாதமாகத் திணித்திருப்பதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாட்டைச் சீரழித்து பொறுப்பை ஒப்படைத்துவிட்டு இலகுவாக எவரும் தப்பிச்சென்றுவிடவே முடியாது!

## இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் கருத்து



நாட்டை முழுமையாகச் சீரழித்து விட்டு பொறுப்பை எம்மிடம் கையளித்து விட்டு இலகுவாக தப்பித்து விடலாம் என்று எவரும் எண்ண முடியாது.

இவ்வாறான சந்தர்ப்பவாத , சம்பிரதாய அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைத்து, அரசியல் மறுசீரமைப்பிற்கு செல்ல வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாகீர் மாக் கார் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

ஜனாதிபதி மற்றும் நிதி அமைச்சர் தமது தவறுகளை ஏற்றுக் கொண்டனர். உண்மையில் அது வரவேற்கத்தக்கது. எனினும் தற்போது பாவ மன்னிப்பு கேட்பது பிரயோசனமற்றது. மன்னிப்பு வழங்குவதில் எவ்வித சிக்கலும் இல்லை. ஆனால் கடந்த இரு ஆண்டுகளாக மக்களின் பணம் வீண் விரயமாக்கப்பட்டுள்ளது. முழு நாட்டையும் சீர்குலைத்துவிட்டு தற்போது எம்மை பொறுப் பேற்குமாறு கூறுகின்றனர்.

நாட்டை தற்போதுள்ள நிலைமையிலிருந்து கட்டியெழுப்புவதற்குச் செல்லும் பாதை அழ கானதல்ல. மிகவும் கடினமானதாகும். எவ்வாறிருப்பினும் அந்த சவாலை ஏற்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயா ராகவே உள்ளது. எனினும் அரச தலைவரை மக்கள் ஜன நாயக முறைமையில் தேர்தல் ஊடாகவே தெரிவு செய்ய வேண்டும்.

இந்த சந்தர்ப்பத்தில் சந்தர்ப்பவாத அரசியலுக்கும் , சம்பிரதாய அரசியலுக்கும் முற்றுப் புள்ளி வைக்க வேண்டும். வெறுமனே பதவிகளிலிருந்து விலகி எம்மிடம் பொறுப்பை கையளித்துவிட்டு இலகுவாக தப்பித்து விட முடியாது. பொருளாதார மறுசீரமைப்பிற்கு முன்னர் அரசியல் மறுசீரமைப்பிற்கு செல்ல வேண்டும். நாம் தற்போது மேற்குலக நாடுகளை பகைத்துக் கொண்டிருக்கிறோம். இந்தியா மற்றும் சீனா என்பன எம்மை சந்தேகத்துடனேயே பார்க்கின்றன. சர்வதேச நாடுகளுடனான உறவை சுமுகமானதாகக் கட்டியெழுப்ப வேண்டும். நாட்டை கட்டியெழுப்புவதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் திறமையுள்ள நிபுணர்கள் உள்ளனர். – என்றார்.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -



போர் முடிந்தும் 13 பிளஸ் பற்றி பேசாத மஹிந்த – பதவியேற்று இரண்டு வருடங்களாகியும் கூட்டமைப்பைத் திரும்பிப்பார்க்காத கோட்டாபய – பொருளாதார நெருக்கடியால் வட்டி கட்ட முடியாத போது அவர்களைச் சந்திப்புக்கு அழைத்தார். அது பெரிதாகப் பேசப்பட்டது. இன்று அவை பற்றியும் பேச்சில்லை. கூட்டமைப்பின் சுமந்திரன் கோட்டாவுக்கு எதிராகத் தனியான பிரேரணையை முன்வைக்க முயல்கிறார்.

'சுமந்திரன் நல்ல நண்பர், அவரோடு தான் விரைவில் எதிர்க்கட்சியில் இருந்து பணியாற்றுவேன்' – என்று செய்திய மஹிந்த அனுப்புகிறார்.

**தக்க தருணம் எது?**

தக்க தருணம் இதுதான். ஆனால் அணுகுமுறையில் நேர்த்தி அவசியம். காலிமுகத்திடலில் இருந்து கேட்கும் கோஷங்கள், பேச்சுக்களில் கேட்பவை – சாமானிய சிங்கள மக்களிடம் இருந்தும், அரசியல் தலைவர்கள், புத்திஜீவிகள், சமூக ஆர்வலர்கள் பலரிடமிருந்தும் வருபவை – தமிழ் மக்களுக்குச் செய்யப்பட்டவைஅநியாயம்என்றஉணர்வுகளை வெளிப்படுகின்றன. இந்த உணர்வுகள் எவ்வளவு பரந்தவை, ஆழமானவை என்பதும், அவற்றைப் பயனுள்ள வகையில்நடைமுறைப்படுத்தபெரும்பான்மை விட்டுக் கொடுக்குமா என்பதும் பார்க்கப்பட வேண்டும். இங்கு ஒரு கட்டமாக தமிழ் இளைஞர்கள், அவர்கள் அனுபவம் முதிர்ந்தவர்களால் வழிநடத்தப்பட்டு, சமூக விழிப்புணர்வாளர்கள், ஆய்வாளர்கள், புத்திஜீவிகளின், அனுசரணையோடு நேருக்கு நேர் சிங்கள மக்களுடன் பேசுதல் வேண்டும். இந்தப் புரிந்துணர்வுகளால் கசப்புணர்வும் பேரினவாதத்தின் வீரியமும் குறையும்.

அப்படியான சந்திப்புக்கள் தென் பகுதியிலும், வடக்கு, கிழக்கு, மலையகப் பகுதிகளிலும் – அரசியல் கட்சிகள் முக்கியம் வாய்ந்தவையாக இல்லாது – நடத்தப்படவேண்டும். இவற்றின்ஊடாகக்கூட இன்னுமொரு அரசமைப்பை ஆக்க விசாரணைக் குழு ஒன்றை அமைக்க வேண்டும் என்ற பொறிக்குள் சிக்ககூடாது.

பண்டாரநாயக்க காலத்திலிருந்து ஒத்துக்கொள்ளப்பட்ட இணக்கங்கள், மங்கள முனசிங்க குழு, திஸ்ஸ விதாரணக்குழு என்பவற்றின் பரிந்துரைகள் எனப் பல விரிகின்றன.

சமூக விழிப்புணர்வாளர்கள், புத்திஜீவிகள் இவற்றைத் தொகுத்து சிங்கள மக்களிடம் தந்து, காலங்காலமாக பேசி ஒப்புக்கொண்ட இவற்றில் எதைத் தர விரும்புகிறீர்கள் எனக் கேட்கலாம். வழமைபோலவே பேரினவாதம் இந்த விழிப்புணர்வுகளுக்கும் முட்டுக்கட்டை போட்டு தமக்கு ஆதரவாக உள்ள அரசியல் மாற்றத்தை ஆக்கக் கூடும். அதை எதிர்கொள்வதற்கும் தமிழ் மக்கள் தயாராகவே இருக்க வேண்டும்.

இவற்றின் ஓர் அங்கமாக அமெரிக்கத் தூதுவர் அண்மையில் வடக்கு, கிழக்குப்பகுதிகளுக்குச்செய்தவிஜயத்தையும் கவனிக்கவேண்டும். இந்தத்தருணத்தில் அது முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது. 'நிலைமைகளை அவதானிப்பதற்கான விஜயம்' என்று வழமைபோல கூறப்பட்டாலும், அமெரிக்க உளவு, புலனாய்வுத்துறைகளுக்கு நிலைமைகள் புரியாதவையல்ல.

தூதுவர் தாம் சந்தித்த பலரிடமும், (காலிமுகத் திடல்) போராட்டத்திற்கு அவர்கள்ஆதரவுதந்து அங்கு சென்று அவற்றை வெளிப்படுத்த வேண்டும் என்ற உந்துதல் தந்தார் எனத் தெரியவில்லை. மாறாக, நீங்கள் ஏன் செல்லவில்லை? ஏன் இந்தத் தயக்கம்? இந்த அரசை மாற்றுவதற்கு தென்னிலங்கை கிளர்ந்தெழுந்து இருக்கும்போது அதனை அகற்றுவதற்கு ஆதரவு தருவ தில் என்ன தயக்கம்? – என்று பெருமள வில் கேட்கப்பட்டதாக அறியக்கூடியதாக இருந்தது. காலி முகத்திடலில் பேசப்படும், வைக்கப்படும் சலுகைகள் காலம் கடந்தவை என்றாலும், ஏதோ ஒரு திருப்தியைத் தந்தாலும், ஊறிப்போய் இருக்கும் பேரினவாதம் அவற்றால் அற்றுப் போய்விடும் என்று தாம் ஏற்றுக் கொள்ளவில்லை, இவற்றை சர்வதேச சமூகம் புரிந்து கொள்ள வேண்டும் என மக்கள் தெரிவித்துள்ளார்கள்.

இந்தச் செயற்பாடுகள் பெரும்பான்மைச் சிங்கள மக்களின் இதயங்களில் இருந்து வருகின்றன என்பதை ஏற்க தமிழ் மக்கள் தயங்குகிறார்கள் போன்றவையும் விளக்கப்பட்டுள்ளன.

பேரினவாதம் அதிகாரத்தைக் கையகப்படுத்தி இந்த அட்டூழியங்களை நடத்தி இருந்தாலும் சிங்கள மக்கள் பொதுவாக ஒரு பெரும்பான்மைப் போக்கிலேயே 'அது தங்களுக்கு அனுகூலமானது' எனக் குளிர்காய விரும்புகிறார்கள். அந்தப் பெரும்பான்மை போக்கு காலம் காலமாக பேரினவாதத்தை ஆதரிக்காவிட்டாலும் தமிழ் மக்களும் நீதியும் நியாயமாக நடத்தப்படவேண்டும் என்ற தன்மையை காட்டவில்லை. அது தங்களது பெரும்பான்மையைப் பாதித்துவிடும் என்ற மனப்பாங்கில் அவர்கள் இயங்கினார்கள். ஆதலால் அவர்கள் தற்பொழுது ஆட்சி மாற்றத்தையும் ராஜபக்ஷக்களையும் குறிவைத்து நடத்தும் போராட்டத்தில் ஒரு நீதியான சமூகத்திற்கு மாற்றம் வரப்போவதில்லை. அதுவே தயக்கம் என்று தெளிவாக மக்கள் தெரிவித்துள்ளார்கள்.

பொருளாதார ரீதியில் நாட்டை மீட்டெடுக்க இனப்பிரச்சனைக்கான முன்னெடுப்புகள் உள்ளடக்கப்பட வேண்டும். அதுவரையில் ஆட்சி மாற்றத்திற்குத் தமிழர்கள் கைகோர்க்க மாட்டார்கள் என்ற அவரது அறிக்கைகளால் அமெரிக்க இராஜாங்கத்திணைக்களமும் நிலைமைகளை அறிந்துகொள்ளும்.

அவர்களோடு சர்வதேசம், எது வித யதார்த்தமான தீர்வை எதிர்பார்க்கிறீர்கள் என்று கேட்கும் தருணம் தமிழ் மக்கள் ஒருமித்த குரலில் பேச வேண்டுமேயொழிய ஆட்சி மாற்றத்திற்கான பேரம் பேசல் தருணத்தில் அல்ல. அதனை அமைதியாகக் கடந்து செல்ல வேண்டும்.

**பொருளாதார சீர்கேடுகள்**

பொருளாதார சீர்கேடு பற்றி பேச வேண்டிய தருணம் கூட இதுதான். தமிழ் மக்களைப் பலவீனப்படுத்த வேண்டும், அவர்களை ஓரங்கட்ட வேண்டும் என்ற உன்மத்தங்களுக்காக சிங்களப் பேரினவாதம் திட்டமிட்டு தமிழ் மக்களின் பொருளாதாரத்தை அழித்தது. அடிமைகளாக, வாழ்க்கை நிலைகளில் எதுவும் எதிர்பார்க்க முடியாதவர்களாக, தொழில் புரிந்து அந்நிய செலவாணியை ஈட்டித் தந்து கொண்டிருந்த மலையகத் தமிழர்களில் பெரும்பாலோர் வாக்குரிமை பறிக்கப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டனர். சிங்களம் மட்டும் சட்டமும், 1983 கலவரங்களும் தென்னிலங்கையில் பணிபுரிந்து கொண்டிருந்த தமிழர்களையும் அவர்கள் நடத்திக்கொண்டிருந்த வியாபாரங்களையும், வர்த்தக வியாபாரங்களையும் அழித்து, அவர்களை ஆஸ்தி அற்றவர்களாக்குவதிலேயே குறியாக இருந்தது. அவற்றைத் தொடர்ந்து பல தமிழ் மக்களும் அவர்களிடயே இருந்த புத்திஜீவிகளும் வெளியேறினார்கள்.

அதன்பின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் தொழில் வாய்ப்புத் தரக்கூடிய எந்தத் தொழிற்சாலையும் அரசாங்கத்தால் நிறுவப்படவில்லை. தனியார் துறையும் இப்பகுதிகளில் முதலீடு செய்யவும் ஊக்குவிக்கப்படவில்லை. பேரினவாதம், இருந்தவற்றையே வளரவிடாமல் கட்டுப்படுத்தியது. இன்னொரு விதத்தில் அழித்தது.

பெருமளவு முதலீடு இன்றி, கடல் நீரை அணைகட்டி சூரியனின் உதவியோடு உப்பு விளைவிக்கும் உப்பளம் ஆனையிறவிலிருந்து நாட்டின் தேவையின் பெரும்பகுதியை நிவர்த்தி செய்தது. அதன் நிலை இன்று என்ன? அதேபோல பரந்தன் இரசாயன நிலையம், காங்கேசன்துறை சீமெந்து ஆலை, வாழைச்சேனை காகித உற்பத்தி ஆலை போன்ற அரசாங்க முதலீடுகளில் எதுவித வளர்ச்சியும் இல்லாமல் உலர்ந்து நிற்கின்றன. காங்கேசன் சீமெந்து ஆலையின் நிலை பரிதாபம். இது போர்க் காலத்தில் எந்த விதக் குண்டுத் தாக்குதலுக்கும் இலக்காகிச் சேதப்படவில்லை. இராணுவத்தால் அவர்களது பாதுகாப்பிற்காகச் சுற்றிவளைக்கப்பட்டு இயங்குதல் தடைப்பட்டது. ஆனால் போரின் முடிவில் அங்கிருந்த எல்லா இயந்திரங்களும் இரும்புக்காகக் களவாடப்பட்டு அதைப் பாதுகாத்த இராணுவத்தினராலேயே தென்னிலங்கைக்குக் கொண்டு செல்லப்பட்டதுதான் நடந்தது.

யுத்தம் முடிந்த இந்த 12 வருட காலங்களில் தமிழ் பகுதிகளில் இருந்த எல்லா உற்பத்தி ஆலைகளும் மூடி இயக்கப்படவில்லை. ஆக நடந்தது கொழும்பைத் தளமாகக் கொண்டு இயங்கிய பல கடன் கொடுக்கும் கம்பெனிகள் தங்கள் கிளைகளைத் தொடங்கி கவர்ச்சிகரமான விளம்பரங்களால் மக்களுக்கு leasing கடன் கொடுத்ததுதான்.

ஆனால் பஸில் ராஜபக்ஷவே 70 வீத பங்குதாரராக அம்பாந்தோட்டையில் தெற்காசியாவின் மிகப்பெரிய சீமெந்து ஆலையை நிறுவி அதனை மஹிந்த திறந்து வைத்துள்ளார்.

நோர்வேயின் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் ஸ்தாபிக்கப்பட்டு சுயாதீனமாக இயங்கிய சிறு ரக வளங்கள் தயாரிக்கும் CeyNor நிறுவனம் பின் முல்லைத்தீவில் மீன்பிடி வலைகள் தயாரிக்கவும், மீன்களைப் பதப்படுத்தி ஏற்றுமதிக்கு அனுசரணையாக ஐஸ் உற்பத்தி நிலையங்களையும் தொடங்கியது. இந்த நிறுவனம் மீன்பிடித் தொழிலுக்குத் தரக் கூடிய உதவிகளைக் கணித்து தேசிய மயமாக்கப்பட்ட பின்னர் அது காலிக்கும் தென்பகுதிகளுக்கும் கொண்டு செல்லப்பட்டு யாழ்ப்பாணம் கைவிடப்பட்டது.

ஸ்ரீமாவோ காலத்தில் இறக்குமதிகள் செய்யமுடியாத கட்டங்களில் மிளகாய், வெங்காயம், கிழங்கு போன்ற உற்பத்திகளால் தமிழ் மக்கள் விவசாயத்தினால் பயன்பெற்றனர். அதைத் தொடர்ந்து வந்த அரசியல் அழுத்தத்தினாலும் அவையும் பாதிக்கப்பட்டு பல காணிகள் பராமரிக்கப்படாமலேயே விடப்பட்டன. விவசாயத்திற்கு ஊக்கமில்லை. புதிய கைத்தொழிற் பேட்டைகள் உருவாக்கப்படவில்லை. ஆலைகள் அழிக்கப்பட்டன. அவற்றின் மீள்நிர்மாணம் பற்றிய சிந்தனையின்றி, சிங்களப்பேரினவாதம் தமிழ்ப் பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டுக்குள்வைத்திருக்கும்காரியங்களையே தொடர்ந்தது. அடக்கி ஒடுக்கி அழிக்கப்படும் தமிழ் மக்களின் பொருளாதாரம் தேசிய பொருளாதாரத்தை படிப்படியாக எப்படி பாதித்தது என்பதை அவர்கள் அறிந்தும் ஆணவமும் மமதையும் இவற்றை பொருட்படுத்தாமல் செய்தன – இன்று பசி அவர்களது வயிறுகளைக்கடிக்கும் வரை, பட்டினிதான் எதிர்காலமாக வரலாம் என்ற பயம் தோன்றும் வரை.

(வளரும்)

# ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான தாக்குதல் எதிர்க்கட்சித் தலைவர் கடும் கண்டனம்

நாட்டில் அவசரகாலச்சட்டம் நடைமுறையிலுள்ள வேளையில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள்மீது நிகழ்த்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதல்களைக் கடுமையாகக் கண்டனம் செய்வதாகத் தெரிவித்துள்ள எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ, இதற்கு ஜனாதிபதி, பிரதமர் உள்ளடங்கலாக ஒட்டுமொத்த அரசாங்கமும் பொலிஸார் உள்ளடங்கலாக பாதுகாப்புத்தரப்பும் பொறுப்புக்கூற வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவாக நேற்று திங்கட்கிழமை அலரி மாளிகையில் ஒன்றுதிரண்டவர்கள், அலரிமாளிகைக்கு முன்பாகக் காலி வீதியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 'மைனா கோ கம' கூடாரங்களை இடித்து, அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களையும் கடுமையாகத் தாக்கினர்.

அதனைத்தொடர்ந்து காலி வீதியின் ஊடாகக் காலி முகத்திடலில் அமைக்கப்பட்டிருந்த 'கோட்டா கோ கம'விற்குச் சென்று அங்கு நிர்மாணிக்கப்பட்டிருந்த கூடாரங்களை எரித்து, போராட்டக்காரர்கள்மீது தாக்குதல் நடத்தினர்.

இதன்போது காலிமுகத்திடலுக்குச் சென்ற எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸவும், கட்சியின் ஏனைய உறுப்பினர்கள் சிலரும் தாக்கப்பட்டு, திருப்பியனுப்பப்பட்டனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் மக்களின் அமைதிப்போராட்டத்தில் அரசாங்கத்தின் ஆதரவாளர்களால் விளைவிக்கப்பட்ட குழப்பம் தொடர்பில் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ள சஜித் பிரேமதாஸ, இது தொடர்பில் மேலும் கூறியிருப்பவை வருமாறு –

அரசியல் தீவிரவாதக்குழுவொன்று அலரிமாளிகைக்கு முன்பாக நிர்மாணிக்கப்பட்டிருந்த 'மைனா கோ கம' மற்றும் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக நிர்மாணிக்கப்பட்டிருந்த 'கோட்டா கோ கம' ஆகிய இரண்டையும் முழுமையாகச் சீர்குலைத்து நிர்மூலம் செய்திருக்கின்றது. இந்த அரசியல் தீவிரவாதத்தை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம். நாட்டில் ஜனநாய கத்துக்கும், பொதுமக்களின் அடிப்படை உரிமைகளுக்கும் ஏதுவான இடமிருக்க வேண்டும். அரசாங்கத்துக்குள் இருவேறு நிலைப்பாடுகள் இருப்பதாக வெளியே காண்பித்துக்கொண்டு, அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும் மக்கள்மீது தொடர்ச்சியாகத் தாக்குதல் நடத்துகின்றார்கள்.

இது மிகமோசமான, மிலேச்சத்தனமான தாக்குதல் நடவடிக்கை என்பதுடன் இதற்கு பொலிஸாரே பொறுப்புக்கூற வேண்டும்.

அவசரகாலச்சட்டம் நடைமுறையிலுள்ள வேளையில், இத்தகைய மிலேச்சத்தனமான தாக்குதல்கள் இடம்பெறுவதற்கு பொலிஸார் அனுமதித்தமை ஏன்? அவர்கள் வெறுமனே வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தமை ஏன்? இதற்கு ஆணையிட்டது யார்? ஆகவே பொலிஸார் உள்ளடங்கலாக ஒட்டுமொத்த பாதுகாப்புப் பிரிவும் இதற்குப் பொறுப்புக்கூறவேண்டியது அவசியமாகும். மேலும் இந்த சட்ட விரோத நடவடிக்கையை நாம் கடுமையாகக் கண்டனம் செய்யும் அதேவேளை, இதனுடன் தொடர்புடைய அனைத்துத் தரப்பினரையும் சட்டத்தின் முன்நிறுத்தவேண்டும் என்று வலியுறுத்துகின்றோம். அதுமாத்திரமன்றி இந்தத் தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள், ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினருக்கும் நாம் ஒன்றைக் கூறவிரும்புகின்றோம்.

சட்டவிரோதமாகத் தாக்குதல் நடத்தியவர்களை சட்டத்தின் முன்நிறுத்தி, உச்சபட்ச தண்டனையைப் பெற்றுக் கொடுப்பதற்கு நாம் முன்னின்று செயற்படுவோம் என்பதே அதுவாகும்.

## மக்களைத் தாக்குகின்றமை நாட்டுக்கு எதிரான செயல்!

### அங்கஜன் இராமநாதன் கண்டனம்



ஜனநாயக மரபுகளின்படி அமைதி வழியில் போராடிய மக்கள் மீது வன்முறை பிரயோகிக்கப்பட்டமையை கண்டிக்கிறேன் என அங்கஜன் இராமநாதன்கண்டனம்வெளியிட்டுள்ளார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் –

பொதுமக்கள் தமது கோரிக்கைகளை அமைதி வழியில் வெளிப்படுத்திய நிலையில், அவர்கள் மீது கொழும்பில் இடம்பெற்ற வன்முறைத் தாக்குதல் மிகவும் அநாகரிகமானது. ஜனநாயக பண்புகளுக்கமைய அமைதியாகப் போராடும் உரிமைநாட்டுமக்களுக்குண்டு. இன்று அந்த உரிமை மீது இரத்தக்கறை படிந்துள்ளது.

இந்த தாக்குதல் சம்பவங்களானவை நாட்டின் மக்கள் உரிமைகள், அரசியல் உரிமைகள், மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக மாண்பின் மீது நிகழ்த்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதலாக நான் கருதுவதோடு எனது கண்டனத்தை வேதனையடைந்த மனதுடன் தெரிவிக்கிறேன். இந்த வன்முறைச் சம்பவங்களானவை, 1983 ஜூலை கலவர நாள்களை மீளவும் நினைவுபடுத்துகின்றன.

அந்த வடுக்களை இன்னமும் சுமக்கும் இனத்தின் பிரதிநிதியாக எனது கவலையை நான் பதிவுசெய்கிறேன். ஜனநாயக ஆட்சியென்பது மக்களால் மக்களுக்காக முன்னெடுக்கப்படுவது. வன்முறையால் மக்களைத் தாக்கி கட்டுப்படுத்தி மேற்கொள்ளப்படுவதல்ல.

நாட்டின் சட்ட ஒழுங்கைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பில் உள்ள அனைவரும், இந்த சம்பவத்தோடு தொடர்புடையவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். சர்வதேச ஒத்துழைப்புடன் நாடு, பொருளாதார மீட்சியை எட்டுமென எதிர்பார்த்துள்ள நிலையில் இந்தச் சம்பவம் பேரிடியாக மாறியுள்ளது.

– இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

## போராட்டக்காறர் மீதான தாக்குதல் ராஜபக்ஷர்களுக்கான முடிவு ஆகும்

### சனத் ஜயசூரிய கண்டனம்

கொழும்பு, மே 10

அப்பாவி போராட்டகாரர்கள் மீது பட்டப்பகலில் இப்படியான வன்முறை கட்டவிழ்த்து விடப்படும் என தான் ஒரு போதும் நினைக்கவில்லை என இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும் சகல துறை ஆட்டகாரருமான சனத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பு அலரி மாளிகை மற்றும் காலிமுகத் திடலில் ஆளும் கட்சியின் ஆதரவாளர்கள், அமைதியாக போராட்டம் நடத்தி வந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தியமை தொடர்பில் தனது டுவிட்டர் பக்கத்தில் இட்டுள்ள பதிவில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

பொலிஸார் இருப்பது ஊழல் அரசியல்வாதிகளை பாதுகாக்க அல்ல எனவும் நாட்டின் பொதுமக்களை பாதுகாக்கவே இருக்கின்றனர் என்பதை பொலிஸார் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் எனவும் சனத் ஜயசூரிய கூறியுள்ளார்.

அத்துடன் இது ராஜபக்ஷவினரின் முடிவு எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஆர்ப்பாட்டக்காரர் மீதான தாக்கு ரெலோ கடும் கண்டனம் தெரிவிப்பு

காலி முகத்திடலில் அமைதியாக அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மீது ஆளும் கட்சியான பொதுஜன பெரமுன ஆதரவாளர்கள் எனப்படும் குண்டர்களால் மேற்கொள்ளப்பட்ட வன்முறை தாக்குதலுக்கு எமது கடும் கண்டனங்களை தெரிவிக்கிறோம்.

– இவ்வாறு ரெலோ அமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

அவரது கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

ஜனநாயக கோரிக்கைகளை ஆளும் தரப்பு எப்படி கையாளுவார்கள் என்பதற்கு இது சிறந்த எடுத்துக் காட்டு.

இந்த ஆட்சியாளர்களிடம் உள்ளகப் பொறிமுறை யின் ஊடாக எமது கோரிக்கைகளுக்கு நியாமான நீதியான தீர்வை எதிர்பார்க்க முடியாது என்ற முடிவிற்கு தமிழ் மக்களாகிய நாம் வந்த காரணம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

1956 இல் அமைதியாக எமது தலைவர்கள் அஹிம்சை ரீதியாக இதே காலி முகத்திடலில் முன்னெடுத்த போராட்டத்தை குண்டர்கள் அராஜகத்தைக் கட்டவிழ்த்து அப்போதைய அரசு அடக்க முற்பட்டது. இன்றும் அதையே தனது மக்களுக்கு எதிராகவும் பெருந்தேசிய அரசியல் தலைமை கைக்கொண்டுள்ளது.

ஜனநாயகப் போராட்டங்களை வன்முறை கொண்டு அடக்க முனைவது அப்போராளிகளை ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை இழக்க வைத்து வன்முறைப் பாதையைத் தெரிவு செய்ய வழிகோலும் அபாயம் ஏற்படும்.

## காலிமுகத்திடல் தாக்குதல் அரசே முழுப் பொறுப்புமாகும்

### நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

கொழும்பு காலிமுகத்திடலில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடத்திய அப்பாவி மக்கள் மீது குண்டர்களை ஏவி தாக்குதல் நடத்திய சம்பவத்துக்கு அரசாங்கமே முழு பொறுப்பையும் ஏற்கவேண்டும். அரசாங்கத்துக்கு சார்பாக அலரி மாளிகையில் கூடிய ஆர்ப்பாட்டக்காரர்கள் காலி முகத்திடலில் கடந்த 30 நாள்களாக போராட்டம் நடத்திய அப்பாவி மக்கள் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் தமிழ் மக்கள் மீது கடந்த 65 வருடங்களாக மாறி, மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் மேற்கொண்ட அரச பயங்கரவாதத்தை நினைவுபடுத்துகின்றன.

– இவ்வாறு தெரிவித்துள்ளார் நீதியரசரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய க.வி.விக்னேஸ்வரன்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

தமது உரிமைகளுக்கு எதிராக சாத்வீக வழியில் போராட்டம் மேற்கொண்ட தமிழ் மக்கள் மீது படையினரை ஏவி தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டிருந்தன. இதுவே பின்னர் ஆயுதப் போராட்டத்துக்கு தமிழ் மக்களைத் தள்ளியது. அதேபோல, உணவு, எரிபொருள், மருந்துப்பொருள்கள் ஆகியவற்றுக்கான தமது உரிமைகளை வலியுறுத்தி அமைதியான வழியில் போராட்டம் நடத்தும் அப்பாவி மக்களின் மீது குண்டர்களை ஏவியும் படையினரின் உதவியுடனும் அரசாங்கம் இன்று மேற்கொண்ட வன்முறை மேலும் வன்முறையை தூண்டும் ஒரு செயற்பாடாகவே அமைகின்றது. ஆகவே, இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ் மக்கள் இந்தச் சம்பவங்களில் இருந்து தூர விலகி நின்று மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

அரசாங்கம் இன்றைய சம்பவத்துக்கு பொறுப்பு ஏற்கவேண்டும். தமிழ் மக்கள் மீது முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை நிகழ்த்தி பல்வேறு ஆதாரங்களின் மத்தியிலும் தாம் எந்த ஒரு படுகொலையிலும் ஈடுபடவில்லை என்று அரசாங்கம் இன்றுவரை எவ்வாறு வாதாடுகின்றதோ, அதேபோல, இன்றைய சம்பவத்துக்கும் தமக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று (பல்வேறு காணொலி ஆதாரங்கள் இருக்கின்றபோதிலும்) வாதாடும் என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை.

அவசர காலச் சட்டம், ஊரடங்குச் சட்டம் போன்றவற்றை திடீரென்று கொண்டு வந்தது இவ்வாறு மக்களை அடித்துத் துன்புறுத்தி இராணுவ அரசாங்கம் ஒன்றை கொண்டு வரவோ என்ற சந்தேகம் எழுகின்றது. தமிழ் மக்களை எவ்வாறு பயங்கரவாதிகள் என்று சித்திரித்து அவர்கள் மீது வன்முறையை ஏவி விட்டார்களோ அதே போல் இனி சிங்கள மக்களுக்கும் எதிராக பயங்கரவாதிகள், தீவிரவாதிகள் என்று ஏதேனும் ஒரு சொல்லைப் பாவித்து வன்முறை அரசாங்கம் ஒன்றை நிறுவ நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்று சந்தேகப்படுகின்றேன். ஆகவே தமிழ் மக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும். இல்லையேல் இவை யாவும் தமிழ்ப் பயங்கரவாதிகளின் சூழ்ச்சி என்று அரசாங்கம் தமிழர்கள் மேல் அல்லது முஸ்லீம்களின் மேல் பாரத்தைப் போட்டு விடுவார்கள். – என்றுள்ளது.

# மக்களின் ஜனநாயக வழிப் போராட்டங்களை இரும்புக்கரம் கொண்டு அடக்குகிறது அரசு!

## சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆவேசம்

அவசரகாலச் சட்டம் பிறப்பித்து இருக்கின்ற சூழ்நிலையில் முற்றுகைப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இடத்துக்கு அரசுக்கு சாதகமான மற்றொரு போராட்டக் குழுவை அழைத்து வந்தமை பிரச்சினையை உருவாக்க அரசாங்கம் தீட்டிய திட்டமே தவிர வேறு எதுவும் கிடையாது என ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

சமகால நிலை தொடர்பாக சுரேஷ் பிரேமச்சந்திரன் கருத்து தெரிவித்த போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அரசாங்கம் போராட்டங்களை அடக்குவதை நோக்கமாகக் கொண்டு அவசரகாலச் சட்டம் பிறப்பித்துள்ளது. அவசரகாலசட்டத்தின் அடிப்படையில் இராணுவத்தினர் மற்றும் பொலிஸாருக்கும் மேலதிக அதிகாரங்கள் வழங்கப்படுகின்றன.

பிரதமரை காப்பாற்றுவதாக திடீரென அலரி மாளிகை முன்பு கூடிய கும்பல், பல நாள்களாக போராடி கொண்டிருந்த மக்கள் வெளியேற வேண்டும் என்று அடிதடியில் ஈடுபட்டனர். காலி முகத்திடல் போராட்ட களத்திலும் பிரச்சினைகள் உருவாக்கப்படுகின்றன.

இதனை பார்க்கின்ற போது மிக விரைவாக காலி முகத்திடலில் உள்ள முழு போராட்டகாரர்களையும் விரட்டியடித்து காலி முகத்திடலை மக்கள் போக்குவரத்தற்ற பிரதேசமாக தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான வேலைகள் நடைபெறுகின்றன.

ஆகவே இந்த அவசரகால சட்டத்தின் நோக்கம், இந்த போராட்டங்களை இல்லாமல் செய்து அரசாங்கம் தான் விரும்பியவாறு விடயங்களை கையாள்வதற்காக அவசரகாலச் சட்டத்தை பயன்படுத்தியது. ஆனால் ஜனநாயக நாடு எனக் கூறிக் கொண்டிருந்த இலங்கை அரசாங்கம், போராட்டங்களை இரும்புக் கரம் கொண்டு அடங்குகின்றன.

அவசரகாலச் சட்டம் பிறப்பித்து இருக்கின்ற சூழ்நிலையில் முற்றுகைப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இடத்திற்கு அரசுக்கு சாதகமான மற்றொரு போராட்டக் குழுவை அழைத்து வந்தமை பிரச்சினையை உருவாக்க அரசாங்கம் தீட்டிய திட்டமே தவிர வேறு எதுவுமே கிடையாது. என்றார்.

# காலி முகத்திடலில் தொடரும் அராஜகம்!

## சஜித் கண்டனம் தெரிவிப்பு

போராட்டக் காரர்கள் மற்றும் ஊடகங்களுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால் கடும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

தனது டுவிட்டர் தளத்தில் பதிவொன்றை இட்டு அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# அமைதியான போராட்டக்காரர்மீது அரசின் குண்டர்களால் தாக்குதல்

## குமார் சங்கக்கார வேதனை

கொழும்பு, மே 10

கொழும்பில் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டமைக்கு இலங்கை கிரிக்கெட் முன்னாள் வீரர்குமார் சங்கக்கார கண்டனம் தெரிவித் துள்ளார். இந்த சம்பவம் தொடர்பில் அவர் டுவிட்டர் பதிவொன்றை இட்டுள்ளார்.

அந்த பதிவில், அமைதியான போராட்டக்காரர்கள் அரசாங்கத் தின் குண்டர்களால் தாக்கப்பட்டனர் என குறிப்பிட்டுள்ளார்.

நிதானத்தைக் கடைப் பிடிக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பொதுமக்களிடம் விடுத்துள்ள கோரிக்கையை மீள பதவிட்டு அவர் இந்த விடயத்தைக் கூறியுள்ளார்.

# காலிமுகத்திடல் போராட்ட களம் அநுர பண்டாரநாயக்க விரைந்தார்

கொழும்பு காலி முகத்திடலில் நடத்தப்பட்டு வந்த போராட்டத்தில் சில கும்பல்கள் உள்நுழைந்து கூடாரங்களை தகர்த்தெறிந்து அராஜக நிலையில் ஈடுபட்டுள்ள நிலையில் சம்பவ இடத்துக்கு ஜேவிபியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க சென்றுள்ளார்.

பொதுஜன பெரமுன கட்சியின் ஆதரவாளர்கள் எனத் தெரிவிக்கப்படும் சிலரால் முன்னெடுக்கப்பட்ட இந்த அராஜக நிலையில் இதுவரையில் 9 பேர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு காலி முகத்திடல் வளாகம் ஒரு யுத்தக்களம் போல காட்சி அளிக்கின்ற நிலையில் பொலிஸார் நீர்த்தாரை பிரயோகம் மற்றும் கண்ணீர் புகைத் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது, தடிகளுடனும், பொல்லுகளுடனும் அங்கு அடியாள்கள் சுற்றும் காட்சிகளைக் காணக்கூடியதாக உள்ளது.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் களத்திற்கு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க சென்றுள்ளார்.

# ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கின்றது அமெரிக்கா

அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள்மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதல்களை அமெரிக்கா வன்மையாக கண்டிக்கின்றது.

இது தொடர்பான இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தனது டுவிட்டர் தெரிவித்துள்ளவை வருமாறு –

அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதல்களை வன்மையாக கண்டிப்பதுடன் இது தொடர்பாக உரியவாறு விசாரணைகளை நடத்துமாறு வலியுறுத்துகின்றோம் என அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# மக்களை பாதுகாக்க வேண்டிய பொலிஸ் தனது கடமையை செய்ய தவறியுள்ளது!

## செந்தில் தொண்டமான் காட்டம்

கொழும்பு, மே 10

நாட்டின் நிலைமை சீர்குலைந்துள்ள சந்தர்ப்பத்தில் மக்களுக்கும் மக்களுக்குமிடையிலே வன்முறை தூண்டப்பட்டுள்ளது. மக்களை பாதுகாக்க வேண்டிய பொலிஸார் தன் கடமையை செய்ய தவறிவிட்டனர் என இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் கண்டனத்தை தெரி வித்துள்ளார். நாட்டில் பொது மக்களையும், சம்பவ இடத்துக்கு விஜயம் மேற்கொண்ட எதிர்க்கட்சி தலைவரையும் பாதுகாக்க முடியாத பொலிஸ் அதிகாரிகள் வேறு யாரை பாதுகாக்க போகிறார்கள்? என கேள்வி எழுப்பியுள்ளார்.

காலிமுகத்திடலில் அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் வன்முறையாக மாறியுள்ளது. சம்பவத்துக்குப் பொலிஸ் மா அதிபர் முழுப்பொறுப்புக் கூற வேண்டும்.

நாட்டின் சட்ட ஒழுங்கையும், மக்களையும் பாதுகாக்கவேண்டிய பொறுப்பில் உள்ள பொலிஸ் அதிகாரிகள் மக்களைப் பாதுகாக்கத் தவறியுள்ள னர். எனவே, இந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் மீது பாரபட்சம் இன்றி சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை முன்கூட்டியே திட்டமிட்டு நிகழ்த்தப்பட்ட இந்த மிலேச்சத்தனமான தாக்குதலுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளடங்கலாக அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அனைவரும் பொறுப்புக் கூறவேண் டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

# காலிமுகத் திடலில் பாதிரியார் மீது தாக்கு!

கொழும்பு காலி முகத்திடல் போராட்டக்களத்தில் ஏற்பட்டுள்ள கலவரத்தின் போது பாதிரியார்கள் சிலர் தாக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு காலி முகத்திடலில் அமைதியான முறையில் கடந்த ஒரு மாதமாக முன்னெடுக்கப்பட்டு வந்த போராட்டம் சில அடாவடி கும்பல்களின் தாக்குதலால் யுத்தக் களமானது.

பொதுஜன பெரமுன கட்சியின் ஆதரவாளர்கள் எனத் தெரிவித்துக் கொண்ட கும்பல் சிலர் ஆர்ப்பாட்டக் களத்தில் அமைக்கப்பட்டிருந்த கூடாரங்களை எரித்து அடித்து உடைத்து அடாவடித் தனத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட 23 இற்கும் அதிகமானோர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதன் விளைவாக நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் அங்கிருந்த பாதிரியார்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

# மஹிந்த ஆதரவு அணிதிரள்வு கோட்டாவுக்கு எதிரானதாகும்

கொழும்பு கொள்ளுப்பிட்டி அலரிமாளிகைக்கு எதிரில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக நடைபெறும் ஆர்ப்பாட்டம் தொடர்பான செய்திகளை சேகரிக்க சென்றிருந்த ஊடகவியலாளர் மீது மஹிந்த ஆதரவாளர் ஒருவர் தாக்குதல் நடத்தியுள்ளார்.

அத்துடன் ஒளிப்பதிவு கருவியையும் தாக்கினார் என ஊடகவியலாளர் ஒருவர் கூறியுள்ளார். எவ்வாறாயினும் தாக்குதல் நடத்திய நபரை ஊடகவியலாளர் பிடித்து எச்சரித்ததுடன் ஊடகங்கள் மீது கை வைக்க வேண்டாம் எனவும் கூறியுள்ளனர்.

அப்போது அங்கிருந்த மஹிந்தவின் ஆதரவாளர் ஒருவர் மன்னிப்பு கோரியுள்ளார். ஊடகங்கள் மீது தாக்குதல் நடத்தி தவறிழைத்து கொள்ள வேண்டாம் எனவும் ஊட கவியலாளர்கள் கூறியுள்ளனர்.

இது சம்பந்தமாக தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவு ஒன்றை இட்டுள்ள சுவிட் ஸர்லாந்தில் தற்போது வசித்து வரும் பிரபல ஊடகவியலாளர் சுனந்த தேசப்பிரிய, மஹிந்த ராஜபக்ஷ ஆதரவாளர்கள் தாம் சோதனை செய்த ஆயுதம் மற்றும் வன் முறையை செய்தியாளர்களுக்கு எதிராக பயன்படுத்தியுள்ளனர்.

மஹிந்த சார்பான இந்த ஆர்ப்பாட்ட அணித்திரள்வு அவரது சகோதரரான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக இருப்பதாகவும் மாபிய குடும்பங்களுக்குள் நடக்கும் போராட்டம் கொடியது எனவும் கூறியுள்ளார்.

# மஹிந்தவின் பிரதமர் பதவி விலகல் அறிவிப்பு கொழும்பில் மக்கள் வெடி கொளுத்திக் கொண்டாட்டம்

கொழும்பின் பல பகுதிகளில் மக்களால் பட்டாசுகள் வெடிக்கப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று காலை முதல் கொழும்பில் பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது.

அரசாங்கத்திற்கு அதிலும் குறிப்பாக மஹிந்தவிற்கு ஆதரவாக அலரி மாளிகை முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வந்தவர்கள் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் இடம்பெற்ற இடங்களுக்குச் சென்று அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வந்தவர்களைத் தாக்கியிருந்தனர்.

இதனையடுத்து பெரும் பதற்ற நிலை ஏற்பட்டிருந்ததுடன் கொழும்பு காலிமுகத்திடல் போராட்ட களம் உக்கிரமடைந்திருந்தது.

இந்த நிலையில் தற்போது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவியை இராஜினாமா செய்துள்ளார். அதற்கான கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இது தொடர்பான அறிவிப்பு வெளிவந்த நிலையில் கொழும்பின் பல பகுதிகளில் மக்கள் பட்டாசு வெடித்து ஆரவாரம் செய்துள்ளனர்.

# மஹிந்த கடந்து வந்த பாதை!



மஹிந்த ராஜபக்ஷ, தான் வகித்த பிரதமர் பதவியை நேற்று இராஜினாமா செய்தார். இது தொடர்பான 'பதவி துறப்பு' கடிதம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பிரதமரின் ஊடகப் பிரிவும் இந்த தகவலை உறுதிப்படுத்தியுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளடங்கலான அரசும் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி காலி முகத்திடல் வளாகத்திலும், அலரிமாளிகைக்கு முன்பாகவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது, ஆளுங்கட்சி ஆதரவாளர்கள் நேற்று தாக்குதல் நடத்தினர்.



போராட்டக் களங்களில் அமைக்கப்பட்டிருந்த கூடாரங்களை அடித்து நொறுக்கி, தீயிட்டுக் கொளுத்தினர். இதனால் போராட்டக்களம் கலவர பூமியாக மாறியது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்து அலரிமாளிகை முன்பாக நடைபெற்ற போராட்டத்தில் பங்கேற்ற ஆளுங்கட்சி ஆதரவாளர்களே தாக்குதலை நடத்தினர் என போராட்டக்காரர்கள் சுட்டிக்காட்டினர்.

அறவழி போராட்டக்காரர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கொலைவெறித் தாக்குதலைக் கண்டித்து, நாட்டில் பல பகுதிகளிலும் மக்கள் வீதிக்கு இறங்கியதால், உடன் அமுலுக்கு வரும் வகையில் நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது. ஊரடங்குக்கு மத்தியில் போராட்டங்களும் தொடர்கின்றன. சில பகுதிகளில் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் மீது தாக்குதலும் நடத்தப்பட்டுள்ளது. வன்முறைச்சம்பவங்களும் பதிவாகியுள்ளன. துப்பாக்கிச்சூட்டுச் சம்பவமும் பதிவாகியுள்ளது.

இவ்வாறு முழு நாடும் கொந்தளித்திருக்கும் நிலையில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகியுள்ளார். நேற்று இடம்பெற்ற மோதல் சம்பவமானது, அவரின் அரசியல் வாழ்வில் மற்றுமொரு கரும்புள்ளியாக அமைந்துவிட்டது என அவருக்கு நெருக்கமானவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

**மஹிந்த ராஜபக்ஷவின் நாடாளுமன்ற அரசியல் பயணம்**

★ 1970 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் பெலியத்த தொகுதியில் போட்டியிட்ட அவர், 23 ஆயிரத்து 103 வாக்குகளைப் பெற்று நாடாளுமன்ற அரசியல் பயணத்தை ஆரம்பித்தார்.

நாடாளுமன்றத்துக்கு இளம் வயதில் (25) தெரிவான உறுப்பினர் என்ற பெருமையையும் பெற்றார்.

★ 1977 – பொதுத்தேர்தலில் தோல்வியடைந்தார்.

★1989 – அம்பாந்தோட்டை மாவட்டத்தில் களமிறங்கி, 13 ஆயிரத்து 73 வாக்குகளைப்பெற்று மீண்டும் நாடாளுமன்றம் தெரிவானார்.

★1994 – இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் போட்டியிட்ட அவர், 78 ஆயிரத்து 77 வாக்குகளுடன் சபைக்கு தெரிவானார். இத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான கூட்டணி வெற்றிநடைபோட்டது.

★ 1994 சந்திரிக்கா தலைமையிலான அமைச்சரவையில் தொழில் அமைச்சு பதவி வழங்கப்பட்டது. 1997 வரை அப்பதவியில் நீடித்தார்.

★ 1997 – மீன்பிடித்துறை அமைச்சு பதவி ஒப்படைக்கப்பட்டது. 2001 வரை அப்பதவியை முன்னெடுத்தார்.

★ 2001 – பொதுத்தேர்தலில் 109 ஆசனங்களை வென்று ஐ.தே.க. ஆட்சி அமைத்தது.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் போட்டியிட்ட மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றம் தெரிவானார்.

★2004 – பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு வெற்றி. சபைக்கு தெரிவான மஹிந்த ராஜபக்ஷவுக்கு பிரதமர் பதவி வழங்கப்பட்டது.

★ 2005 – இல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ களமிறங்கினார். 48 லட்சத்து 87 ஆயிரத்து 152 வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றார்.



★ 2010 – ஜனாதிபதித் தேர்தலில் 2ஆவது முறையும் போட்டியிட்டார். 60 லட்சத்து 15 ஆயிரத்து 934 வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றார்.

★1978 அரசமைப்பின் பிரகாரம் நபரொருவர் இரு தடவைகள் மட்டுமே ஜனாதிபதியாக பதவி வகிக்க முடியும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. 18 ஆவது திருத்தச் சட்டம்மூலம் இந்த ஏற்பாட்டை மஹிந்த – கடும் எதிர்ப்புக்கு மத்தியில் மாற்றினார்.



★ 2015 – மூன்றாவது முறையும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டார். எனினும், அவரால் வெற்றிபெறமுடியவில்லை.

★ 2015 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் குருநாகல் மாவட்டத்தில் களமிறங்கிய மஹிந்த ராஜபக்ஷ 4 லட்சத்து 23 ஆயிரத்து 529 வாக்குகளைப் பெற்றார்.

★ 2018 ஒக்டோபர் 26 ஆம் திகதி பிரதமராக பதவியேற்றார். (ஆட்சி கவிழ்ப்பு சூழ்ச்சி)

★ 2018 டிசம்பர் 15 ஆம் திகதி பிரதமர் பதவியை மஹிந்த ராஜபக்ஷ இராஜினாமா செய்தார்.

★ 2018 டிசம்பர் 18 இல் எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டார்.

★ 2019 நவம்பரில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ வெற்றிபெற்றதையடுத்து, நவம்பர் 21 ஆம் திகதி பிரதமராக பதவியேற்றார் மஹிந்த.

★ 2020 பொதுத்தேர்தலில் குருநாகலையில் போட்டியிட்டு 527,364 வாக்குகளைப் பெற்றார். இது இலங்கை அரசியல் வரலாற்றில் வேட்பாளர் ஒருவர் பெற்ற அதிகூடிய விருப்பு வாக்குகளாகும். மீண்டும் பிரதமராக பதவியேற்பு.

★ 2022 மே 09 ஆம் திகதி, பிரதமர் பதவியில் இருந்து விலகும் அறிவிப்பு விடுப்பு.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, தனது 52 வருடகால அரசியல் பயணத்தில் நான்கு தடவைகள் பிரதம அமைச்சராக பதவியேற்றிருந்தாலும், குறுகிய காலப் பகுதிக்கு மட்டுமே அவரால் அப்பதவியில் நீடிக்கக்கூடியதாக இருந்தது.

இலங்கையில் பிரதமர் அமைச்சு பதவியை வகித்தவர்கள், இவ்வாறானதொரு நெருக்கடி நிலைமையை எதிர்கொண்டு பதவி விலகவில்லை என சுட்டிக்காட்டப்படுகின்றது. பல இடங்களில் மக்கள் பட்டாசு கொளுத்தி, பாற்சோறு சமைத்து மஹிந்தவின் பதவிவிலகலைக் கொண்டாடியுள்ளனர். அதே நேரம் அவரது அரசுக்கு எதிரான வன்முறைகளும் இலங்கை முழுவதும் தலைவிரித்தாடுவது குறிப்பிடத்தக்கது.